மீளாத காதல்

மாக்ஸிம் கார்க்கி

"எனக்கு வாழ்க்கையில் குறிக்கோள் ஒன்றுண்டு. நாடக அரங்கிலுள்ள ஆபாசங்கள் அனைத்தையும் ஒழித்துவிட வேண்டுமென்று விரும்புகிறேன். இன்றைய பெண் உலகத்தின் உயரிய பண்பை உலகமறியச் செய்ய வேண்டுமென்று கருதுகிறேன். வெறும் காதல் மட்டுமல்ல, பிள்ளைப் பேறு பெறும் தாய்மை மட்டுமல்ல. இன்றைய பெண் புதிதாக ஒன்றை விரும்புகிறாள். அந்த புதுமை என்ன?

மீளாத காதல்

ஆசிரியர்

மாக்ஸிம் கார்க்கி

○

தமிழ்ப்படுத்தியது

டி. என். ராமச்சந்திரன்

○

இமயப் பதிப்பகம்

நாகப்பட்டினம்.

முதற் பதிப்பு:
ஜனவரி 1951.

விலை ரூபாய் ஒன்று

அச்சிட்டோர்:
தாரா அச்சகம்,
நாகப்பட்டினம்.

பதிப்புரை

○

மாக்ஸிம் கார்க்கி (1869 — 1936)

கார்க்கி ஒரு அற்புதக் கலைஞர். சிறந்த சிந்தனைவாதி. ஒப்பற்ற புரட்சிக்காரர். புதுயுகத்தின் சிருஷ்டி கர்த்தா. அவருடைய வாழ்வே ஒரு பெரும் சோக சரிதம். காலத்துடன் எதிர்த்துப் போராடி அடிமைப் பட்ட மக்களுக்கு சுதந்திரத்தையும், சமதர்மத்தையும் அளித்து அவர்களுக்கு உணர்ச்சி ஊட்டக்கூடிய வகையிலே புதுமைக் குரலை எழுப்பினார்.

அவர் வாழ்க்கையில் வறுமை, கொடுமை, தாளாத துன்பத்தை அனுபவித்தார். ஐந்து வயது முதல் தன் வாழ்க்கைக்காக வேலை செய்தார். இருபதாவது வயதில் தற்கொலை செய்துகொள்ள முயன்றார். அதன் விளைவாக ஏற்பட்ட நோய் அவரை கடைசிவரை பற்றிக் கொண்டது.

இருபத்தி ஐந்தாவது வயதில் ரயில்வே கார்டாக ஊழியம் செய்தார். பிறகு அரசியல் கைதியாகி டிப்லிஸ் பக்கம் ஒரு கோட்டையில் சிறைப்படுத்தப்பட்டார்.

அவருடைய புரட்சிகரமான வாழ்க்கையும் கருத்தும் இளைஞர் உலகத்தைத் தட்டி எழுப்பியது. தன் நாட்டின் கலாச்சார நல்வாழ்விற்காக ஓயாது பாடுபட்டார்.

1906-ம் ஆண்டு லண்டன் சென்று லெனினுடைய நட்பையும் நெருங்கிய தொடர்பையும் பெற்றார். மகா யுத்தம் ஏற்பட்டதும் ரஷ்யாவுக்குத் திரும்பினார். 1917-ம் ஆண்டு புரட்சியிலும் அதற்கு ஒத்திகையான 1905-ல் நடந்த சிறு புரட்சியிலும் கார்க்கிக்கு பெரும் பங்கு உண்டு.

அவரது பிற்காலங்களில் நோயுற்றிருக்கும்போது நேப்பிள்ஸின் அழகுமிக்க கடற்கரையில் ஆதவன் ஒளி கண்டு வாழ்ந்தார். அங்கு ஒன்பது ஆண்டுகள் கழிந்தன. அந்த நாளில்தான் இந்த 'மீளாத காதல்' என்ற கதையை எழுதினார். அவர் எழுதிய 'தாய்' (Mother) உலகப் பிரசித்திபெற்றது.

அவருடைய நூல்கள் 3½ கோடிக்குமேல் விற்பனையாகி இருக்கின்றன. அவருடைய எழுத்தில் வாலிபர்கள் மிகவும் வேட்கைகொண்டு விரும்பிப் படிக்கின்றனர்.

கலையும் வாழ்வும் அவருடைய சிருஷ்டிகளில் ஒன்றுகலந்து விளங்கின. வாழ்வுதான் கலை என்ற உண்மையை மெய்ப்படுத்தினார். ஊனும் உயிரும் கொண்டு உலவும் மனித வர்க்கத்தின் இன்பத்தையும்–துன்பத்தையும், ஆனந்தத்தையும் – அழுகையையும் கலந்து நம்முன்னே காட்டினார்.

வாழ்க்கையின் அடிப்படை உணர்ச்சிகளேயும், போராட்டங்களேயும் கலே உலகில் ஈடுபடுத்தி அவரது கருத்துக்களே விளக்கினர்.

இந்த 'மீளாத காதல்' ரஷ்ய மொழியில் முதன் முறையாக 1925-ம் ஆண்டு வெளிவந்தது. அதன் பிறகு கார்க்கியின் நெருங்கிய நண்பரால் மொழி பெயர்க்கப்பட்டு சென்ற வருஷம் லண்டனில் "Unrequited love" என்ற பெயரால் முதன் முறையாக வெளிவந்தது.

இதுவரை இந்திய மொழிகளில் எதிலும் வெளி வராத இக்கதை மாக்ஸிம் கார்க்கியின் உன்னதங் களில் மிகச் சிறந்தது. உலக காதல் இலக்கியங்களில் இதற்கு ஒரு தனி இடம் உண்டு.

இதனே தமிழர்கள் பெரிதும் விரும்பிப் படிப் பார்கள் என்று வெளியிடுகிருேம்.

நாகப்பட்டினம், 1—1—1951.

தோ. ந. வீரராகவன்,
இமயப்பதிப்பகம்.

மீளாத காதல்

○

நான் 'தியேட்டர் மியூஸ்' பக்கம் போகும் பொழுதெல்லாம் அங்கு சிறிய கடையொன்றின் கத வருகில் ஒருவர் தென்படுவார். அவர் கதவின் பக்கத் திலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகைகளை புரட்டிக் கொண்டிருப்பார். அல்லது மார்போடு கையை கட்டிக்கொண்டு கதவில் சாய்ந்து நிற்பார். கடையின் முகப்பில் 'ஸ்டேஷனரி' என்ற எழுத்துக்கள் பொறிக் கப்பட்ட ஒரு சிறு பலகை தொங்குவதிலிருந்து அக் கடையின் தன்மை விளங்கும். ஜன்னல் கதவிற்குப் பக்கத்திலிருந்த அட்டைப்பெட்டிகளில் கார்டுகள், கவர்கள், லெட்டர் பேடுகள், பழைய ஸ்டாம்புகள் முதலியன வைக்கப்பட்டிருந்தன. நான் அந்த கடைப் பக்கம் போகும்பொழுதெல்லாம் அங்கிருந்த அழுக் கடைந்த சாமான்களை கவனிப்பேன். ஆனால் கடையின் எதிர் வரிசையிலிருந்த பாழான வீட்டின் ஜன்னல் பக்கம் ஓயாது கவனம் செலுத்திவந்த அக்கடைக்கார ரின் மர்மத்தை அறியவே அதிக ஆவலுள்ளவனாய் இருந்தேன்.

கடையின் முன்னிருந்த அக்கட்டிடம் நூறு வருஷங்களுக்கும் பழமையானது. இப்போது அது

புறுக்கள்வசிப்பதற்கு மட்டும் பயன்பட்டு வந்தது. கட்டடத்தின் முகப்பில் தெரிப்பு ஏற்பட்டிருந்தது. திறந்த ஜன்னல்கள் கடைச்காரரின் கவனத்தைக் கவர்ந்தன.

கடைக்காரர் நீண்ட, நாள்பட்ட கோட் அணிந்திருந்தார். அந்த அங்கிக்குள் மெலிந்த கட்டமைந்த திரேகத்தோடு அவர் காணப்பட்டார். அவருடைய மிருதுவான பழுத்த தலைமயிரும், தாடியும் ஒழுங்காக வாரப்பட்டிருந்ததால் அவர் பொலிவுற்று விளங்கினார். அவர் தலையை வாரிக்கொண்டிருந்த விதமே அவரை ஒரு மேதை என்று எடுத்துக்காட்டியது. ஆனால் அவரது நீண்ட வரண்ட முகமானது அவரை வேறுக்கியது. அவரது கண்களோ நீலம். கண்ணின் கருமணியோ மங்கல். அவரது பார்வை நேராகவும், ஆழமாகவும் காணப்பட்டது. அது எதையோ ஊடுருவிச்செல்வது போல் தோற்றமளித்தது.

நான் கடையின் ஜன்னல் அருகில் சில நிமிஷங்கள் நின்றேன். ஏனெனில் 'உனக்கு என்ன வேண்டும்?' என்று கேட்கட்டுமே என்கிற ஆசையால் தான். ஆனால் அவர் என்னை கவனிக்கவே இல்லை. அவர் ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலுள்ளவராகக் காணப்பட்டார். அவர் மார்போடு கையை இறுகக்கட்டிக்கொண்டு அசையாது சிலைபோல் நின்றார்.

அவர் எதைத்தான் இமை கொட்டாது காவல் காக்கிறார்? அல்லது எதற்காகத்தான் ஆழ்ந்த கவலையிலிருக்கிறார்?

பள்ளிக்கூடத்துப் பையன்கள், பழைய ஸ்டாம்பு களை வாங்க அடிக்கடி அக்கடைக்கு ஒடிவருவதுண்டு. அந்த பையன்களிடத்தில் 'தூக்கி வாரிப்போட்டது போல' பேசுவார். நான் கடைக்கு 'கவர்' வாங்கச்சென்ற பொழுதுகூட என்னை அவர் சாதாரணமாக, விரும்பாத தோரணையில், கவர் கட்டுகளைப் புரட்டி விலையைச் சொல்லிவிட்டு, நான் வெளியேறினாலும் பரவாயில்லை என்கிற நிலையில், பழையபடி கையை மார்போடுகட்டிக் கொண்டு நிற்கலானார்.

"நான் வெகு நேரமாக காத்திருக்கிறேனே" என்றேன்.

" ஆமாம் " என்றார்.

" இந்த கடையும் ஒரு ஒதுப்புறம் "

" ஆமாம் "

'ஏதாவது தங்களிடம் பழைய நாணயங்கள் இருக்கின்றனவா? "

" இல்லை "

இந்த பேச்சிலிருந்து கடைக்காரருக்கு பேச விருப்பமில்லையென்று தெரியவில்லையா?

இந்த நிலையில் எனது பார்வை திடீரென்று ஒரு தபால் கார்டின் மீது விழுந்தது. அதில் மானைப்போல் மருண்டு நோக்கும் கண்ணழகும், புன்சிரிப்பு தவழும் முகத்துடன்கூட ஒரு கட்டழகி நாற்காலியில் ஒயிலாக உட்கார்ந்திருந்தாள். அவளுடைய பாதி வாயை மெல்

லிய இறகாலான விசிறி மறைத்திருந்தது. அந்த ஓவியப் பாவையின் முக வசீகரமே தனி அழகுதான்! அந்த அழகியின் உருவத்தின்கீழ் 'நாட்டின் கீர்த்திபெற்ற நடிகை ராணி லாரிஸா' என்று தீட்டப்பட்டிருந்தது.

மற்றொரு தபால் கார்டில் அதே அழகியின் உரு வம் 'ஒபீலியா'வின் தோற்றத்தில் கனிந்த பார்வை யோடு கையில் மலர்மாலையுடன் புன்னகை தவழும் காட்சியுடன் காணப்பட்டது.

இன்னும் 'மேரி குவீன் ஆப் ஸ்காட்ஸ்' இப்ஸ னின் 'நோரா'விலும் காட்சியளித்தாள். அனைத்தி லும் மலர்ந்த சிரிப்புடனும் கவர்ச்சிமிக்க முகத்துட னும் காணப்பட்டாள்.

"இதில் இவள் எவ்வளவு தத்ரூபமாக காட்சி யளிக்கிறாள்" என்று தான் வரைந்த ஓவியத்தைக் கடைக்காரர் என்னிடம் எடுத்துக்காட்டினார்.

"நான் அந்த பெண்ணைப்பற்றி இதுவரை கேள்விப்பட்டது கிடையாதே" என்று சொன்னேன்.

அவர் என்னுடைய அறியாமையில் அதிர்ப்தி பட்டவராகி தோள்களை சுருக்கிக்கொண்டு "அவள் மிக கீர்த்தி வாய்ந்தவளாயிற்றே! அவள் நாடக உலகில் முன்னணியில் வைத்து மதிக்கப்படவேண் டியவள்" என்று சொல்லி அநேக பெரிய பட்டணங் களின் பெயரை வரிசையாக குறிப்பிட்டு அங்கெல்லாம்

புகழ்பெற்று நாடகமாடியதைக் கூறி அவளைப்பற்றி பத்திரிகை உலகம் கூறியிருந்த புகழ்மாலைகளையெல்லாம் சரமாரியாக மடமடவென்று கண்களை மூடிக் கொண்டு கூறி முடித்தார்.

"அந்த பெண் உயிரோடு இருக்கிறாளா?"

"இல்லை. அவள் இறந்துவிட்டாள்."

"நீண்டகாலமாகிவிட்டதா?"

"ஒன்பது வருஷங்களாகின்றன."

இந்த அற்புத மனிதர் விசேஷ குணம் வாய்ந்தவர்தான். உலகிலும் இதுபோன்ற மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! நான் இவரைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ளவேண்டுமென ஒரு முடிவுக்கு வந்து அதில் வெற்றியும் பெற்றுவிட்டேன். அந்த அபூர்வ மனிதர் என்னிடம் சொன்ன வரலாறுதான் கீழே உள்ளது.

என்னுடைய கதையின் முழு சோகத்தையும் நீங்கள் பூரணமாக தெரிந்துகொள்வதற்குமுன் என்னுடைய வரலாற்றை குழந்தைப் பருவத்திலிருந்து ஆரம்பிக்கிறேன்.

என்னுடைய தந்தை பிரபல சோப் வியாபாரி. மிக கண்டிப்பான குணம் படைத்தவர். எவரையும் நம்பாத சுபாவம் கொண்டவர். ஆனால் தொழில்

வன்மையும் — செல்வக்கொழிப்பும் அவரிடம் மிருந் திருந்தன. அவர் மிக உயரமானவர். தலை நிறைய அடர்ந்த கேசமும், நல்ல திரேகக் கட்டும் உடையவர். ஆண் சிங்கத்தைப்போன்று ஆண்மையோடு நடக்க வேண்டியவர், இடி விழுந்தவர்போல் குனிந்ததலை நிமி ராது நடந்தார். இதற்குக் காரணம் என் தாயாக இருக் கலாம். அவள் துருக்கிய வீரரின் மகள். எனக்கு அப் போது ஒன்பது வயது. என் சகோதரன் கோலியா வுக்கு ஆறு வயது. அந்த காலத்தில் என் தாயார் ஒரு பிரபல பியானோ வாத்தியக்காரனோடு வெளியேறிவிட் டாள். ஆனால் அதற்குப்பிறகு கொஞ்ச நாட்களிலேயே அவள் எங்கோ வெளிநாட்டில் இறந்துவிட்டாள்.

அவள் ஒருசமயம் ‘கடல் கன்னியின்’ சோபிதத் தில் உடை உடுத்தியிருந்தாள். அவளது நீண்ட கருங் கூந்தல் அன்றலர்ந்த புஷ்பங்களோடு முதுகின் கீழ்ப் பக்கம் வரை தொங்கியது. அவள் அணிந்திருந்த வைர அணிகள் அவள் அழகிற்கு அழகு செய்வனபோல் ஜொலித்தன. அப்பொழுது அவள் என்னை நோக்கி,

“நான் நன்றாக இருக்கிறேனா?” என்றாள்.

“ரொம்ப ஜோராக இருக்கிறாய் அம்மா” என் றேன். அவள் என்னை வாரியணைத்து நெற்றியில் முத்த மிட்டாள். “நான் சொல்வதை கேட்கமாட்டேனென் கிறாயே? நீ என் மீது பிரியமாக இல்லை” என்றாள்.

நான் அவள் பேச்சை கேட்டு நடப்பதாக வாக் குறுதி செய்தேன். ஆனால் ‘ஈஸ்டரோடு’ அவள் மறைந்துவிட்டாள்.

நாங்கள் ஒரு இருண்ட சிறிய அறையின் மூலையில் கிடந்த மேஜையருகில் உட்கார்ந்தோம். மேஜை மீது இரண்டு மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன. ஒரு பழைய, வேலைப்பாடமைந்த அழகிய கண்ணாடிக் கோப்பையில் 'ஒயின்' நிரம்பியிருந்தது. அறையின் சுவர்களில் இயற்கை காட்சிகளின் வர்ண ஓவியப் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. ஒரு மூலையில் 'டச்' ஸ்டவ் பழுக்க எரிந்துகொண்டிருந்தது. கடைக்காரர் நாற்காலியில் அமர்ந்து கையை மார்போடு கட்டிக்கொண்டு கால்களை நீட்டி உட்கார்ந்திருந்தார். அவருடைய பார்வை எரிந்துகொண்டிருந்த மெழுகுவர்த்திகளின் ஸ்டாண்டுகளிலிருந்த மஞ்சள் புஷ்பங்களில் பதிந்திருந்தது. சுவற்றின் ஒரு பக்கத்தில் ரிப்பன்களால் அலங்கரிக்கப்பட்ட பிடிகளோடுகூடிய 'கயிதார்' வாத்தியம் தொங்கிக்கொண்டிருந்தது. அதனையொட்டி படுக்கை அறைக்கு வழியிருந்தது தெரு விளக்கின் வெளிச்சம் ஜன்னல் கண்ணாடிகளின்வழியாக பிரகாசித்துக்கொண்டிருந்தது. அதோடு மழைத்துளிகளின் காட்சியும் கண்ணாடியில் பிரதிபலித்தது. நனைந்த கண்ணாடிகளின் மூலம் வெளியிலிருந்து வந்த தெரு விளக்கின் வெளிச்சம் நடிகை லாரிஸாவின் பெரிய போட்டோ படத்தின்மீது விழுந்து அழகு மிளிரச் செய்தது. அந்த போட்டோ கருப்பும் வெளுப்பும் கலந்த, துக்கத்தை நினைப்பூட்டும் சட்டத்தால் கோர்க்கப்பட்டு தனியாக வைக்கப்பட்டிருந்தது. அதற்கு மணியாலும், ஜரிகையாலுமான மாலைகள் போடப்பட்டிருந்தன.

அறை முழுவதுமே பழைய பொருள்களின் வாசனை வீசிக்கொண்டிருந்தது. காய்ந்து மக்கிய மலர்களின் மணம் அங்கே கலந்திருந்தது. அம்மனிதனின் சிதைந்த பேச்சுக்களிலும், பழைய சாமான்களின் வாசனையைப்போன்ற வாடையே வீசியது. அவருடைய பேச்சுகள், இலையுதிர்காலத்தில் மரத்திலிருந்து இலைகள் தானே காற்றில் உதிர்வதுபோல நழுவிக்கொண்டிருந்தன.

அவர் மேலும் சொன்னார்:

என் தகப்பனார் தன் மனைவியை இழந்து பதினெட்டு ஆண்டுகள் வாழ்ந்தார். அக்காலத்தில் சமையற்காரி, வேலைக்காரி ஆகிய இருவர்களைத் தவிர வேறு பெண்வாடையே எங்கள் வீட்டில் வீசியது கிடையாது. எங்களைப்பற்றிய அக்கரை எங்கள் தகப்பனாருக்கு இல்லை. பதினெட்டு வருஷங்களில் எங்கள் தகப்பனார் எதற்கெடுத்தாலும் 'அது ஏண்டா?' என்ற கேள்வியை அதட்டிக்கேட்டதுதான் எங்களுக்குத்தெரியும். இந்தக் கேள்வியானது எங்களை பயமுறுத்தி வந்தது. இந்த கேள்விக்கு பயந்து நாங்கள் பதுங்கிக்கொள்வதுண்டு. எங்கள் வீட்டின் தளத்தில் ஏழு அறைகள் இருந்தன. அவை ஒவ்வொன்றும் இருட்டு அறைகளே! அவைகளில் நிறைய வீட்டு சாமான்களிருந்தன. நாங்கள் ஒளிந்துகொள்வதற்கு இதைவிட வேறு என்னதான் வேண்டும்?

என்னை என் தகப்பனார் ஆரம்பப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார். அதற்குமேல் எனக்கு படிப்பு கிடையாது. வியாபாரத்திற்கு அந்த படிப்பே போதுமென்று என் தந்தை முடிவுகட்டிவிட்டார். ஆனால் உடல் மெலிந்த என் சகோதரன் கோலியாவையோ முதலில் செகண்டரி பள்ளிக்கூடத்திற்கும், பின் கணிதம், ரசாயனமாகியவற்றைப் படிக்க சர்வகலாசாலைக்கும் அனுப்பினார்.

ஜூன் மாதம் கோடை நாளொன்றில் எங்கள் தகப்பனார் மாதாகோவில் ஊர்வலத்திற்கு சென்றிருந்தார். திரும்பி வந்ததும் வீட்டில் தயாரித்திருந்த 'ஐஸ் பீரை'க் குடித்தார். அதற்குப் பிறகு ஐந்தாம் நாள் அவர் மரணப் படுக்கையில் விழுந்துவிட்டார். அம்மரணப் படுக்கையில் கம்பீரமாக படுத்திருக்கும் பொழுதுகூட, அவர் தனது 'விதி'யைக் குறித்து 'அது எண்டா?' என்று வழக்கமாகக் கேட்கும் வினாவின் நாதமே என் காதுகளில் ஒலித்து நின்றது.

அவர் இறந்த அன்று தொழிற்சாலையில் வேலை இல்லை. வீடோ கிருஸ்துமஸ் அல்லது ஈஸ்டர் விடுமுறை நாட்களைப்போல் கோலாகலமாயிருந்தது. அதோடு அன்று வேலைக்காரர்கள் சப்தம் போட்டுப் பேசவும், இரைச்சலாக நடந்துகொள்ளவும் தயாராகிவிட்டார்கள்.

எங்கள் தகப்பனாரின் மரணத்தால் அவர்கள் குதூகலமாய் இருந்ததை நான் கவனித்தேன். என்னுடைய நிலைமையும்கூட அவ்விதமேதான் இருந்தது.

அதை நான் வெட்கத்தோடு ஒத்துக்கொள்கிறேன் அவர் உயிருடன் இருக்கும்பொழுது எங்கள் வீட்டில் ஈக்கள்தான் சுதந்திரமாக இருந்தன. அவைகள் தான் தங்கள் இஷ்டத்திற்கு 'புஸ்' என்று இரைச்சல் போடலாம். எங்கள் தகப்பனுர் எப்பொழுதும் சப்தம் செய்யாமல் நடந்துவருவார். எந்த சிறிய சப்தத்தையும் அவரால் சகிக்கமுடியாது. கதவு கொஞ்சம் வேகமாக சாத்தப்பட்டால்கூட அதற்காக ஒரு அதட்டு அதட்டி விடுவார். ஆனுல் கோலியா கொஞ்சம் முறுக்கான வாலிபனுதலால் வாய்விட்டுப் பேசுவான். அவன் அச்சமயத்தில் அவர்கள் சந்தோஷத்திலிருக்கிருர்களென்று கருதி ஆத்திரத்தோடு "அவர்கள் என்ன கும்மாளமடிக்கிருர்கள்" என்று கேட்டான்.

"கோலியா! இதுவரை அவர்களுக்கு அப்பாவைப் பிடிக்காமலிருந்தது. அவர்கள் கூச்சலை நீ பொருட்படுத்தாதே!" என்றேன்.

"அப்பாவைப் பிடிக்கவில்லையா?" என்ருன்.

"ஆம், அப்பாவை யாருக்கும் பிடிக்காது".

"உனக்குக் கூடவா?"

"உனக்கும் அப்படித்தானே? என்று சொல்லிவிட்டு, நாம் இனி உண்மையுள்ளவர்களாக நடப்போம்" என்றேன்.

கோலியா பேசாது திறந்த ஜன்னல் அருகில் போய் உட்கார்ந்து விட்டான். அந்தப் பக்கத்திலிருந்து

சோப்புக் கம்பெனியின் கொழுப்பு, ஆஸிட் ஆகியவை களின் துர்நாற்றம் மூக்கைத் துளைத்துக்கொண்டிருந்தது. அப்பொழுது ஒற்றைக்கண்ணனுன் முஸ்தபா என்ற தார்த்தார் தேசத்திய எங்கள் வேலைக்காரன் கொழுப்பு படிந்த தரையை கழுவிக்கொண்டிருந்தான். தொழிற்சாலைஓடிக்கொண்டிருக்கும் சாதாரணகாலமாக இருந்தால் அது ஒரு தொந்திரவாக இருக்காது. அப்பொழுது கோலியா ஜன்னல் பக்கம் எட்டிப்பார்த்து "முஸ்தபா, சப்தம் உண்டாக்காதே" என்று சொல்லி என்னைப்பார்த்து "அவன் துக்கிறிப்பயல்; நம்முடைய தகப்பனுருடைய ஞாபகார்த்தத்தையே அழிக்கப் பார்க்கிறுன். தகப்பனுரின் சடலமிருக்கும்பொழுதே துக்கிறித்தனமாக எல்லாவற்றையும் துடைக்கப் பார்க்கிறுன்" என்றுன். ஆனுல் நான் அவனுக்கு ஆறுதலாக சமாதானம் சொன்னேன். "தம்பி நீயும், நானும் சேர்ந்து ஒற்றுமையுடன் வாழ்வோம். நான் தொழிலைக் கவனித்துக்கொள்கிறேன். நீயோ படிப்பை கவனித்துக் கொள். இனி பணத்திற்காக நீ சிரமப்படவேண்டியதில்லை, காட்சிகளுக்கு போகவேண்டியிருந்தால் 'அது ஏண்டா?' என்று இப்பொழுது யாரும் உன்னை அதட்டமாட்டார்கள்" என்றேன்.

என்னுடைய தந்தையின் மரணத்தால் நான் கொஞ்சமும் கலக்கமடையவில்லை. அது என்னுடைய தவருக இருக்கலாம். நான் போலிக்கண்ணீர் விடுவதற்கு தயாராயில்லை. காரணம் நான் வேஷதாரி அல்ல.

"தம்பி! நாம் ஒருவாரத்துக்கு முன்புகூட வெறுப்பாலும், துன்பத்தாலும் இரவு முழுதும் அழு தழுது தீர்க்கவில்லையா? அதுமாதிரி எத்தனை இரவுகள்."

அதற்கு ஆகாயத்தை நோக்கியவண்ணம் அவன் சொன்னான். "ஆகாயம் — தகரத்தைப்போன்று எவ்வளவு கொடுமையாகவும், வெறுப்பாகவும் காணப்படுகிறது. நமது தொழிற்சாலையும், நமது உலகமுமே தகரத்தில் உள்ள தூசி, தும்பட்டை, துருமாதிரி இருக்கின்றன" என்றான். இதுபோன்ற எண்ணங்கள் என் சகோதரனுக்கு ஏற்படுவதுண்டு. அவை ஒரு விதத்தில் எனக்குப் பிடித்தமாகவுமிருந்தன. வியாதியஸ்தன் தன் சரீரத்தைப்பற்றி கவலைப்படுவதுபோல் அவன் உலகத்தைப்பற்றி விசாரப்படுவதுண்டு. அவன் மெலிந்து — துவண்டு காணப்பட்டானாயினும், ஆரோக்கியமுடையவனாகவே இருந்தான். அவனுடைய சுருத்த கேசமும், அழகிய முகவெட்டும், கூரிய கண்களும் அவனுக்கு ஒரு தனி அழகைக்கொடுத்தன. அவன் எனது தந்தையாரிடமிருந்து 'பியானோ' வாசிக்கக் கற்றிருந்தான். அவன் எதிலும் மிருதுவாகவும், நளின மாகவும் காணப்பட்டான்.

அவனிடம் நான் "நம்முடைய தந்தையாரால் நமக்கு கிடைத்த நன்மை நம்முடைய சகோதரத்துவமேயாகும். அவருடைய கண்டிப்பான குணத்தால் நாம் மிகநெருங்கியவர்களானோம். அதனால் நம்முடைய அன்பு மிக ஆழமானது. நமது வாழ்நாள் முழுதும்

நாம் இணைபிரியாது அன்போடு வாழவேண்டும். இதுவே எனது ஆசை. நான் உன்னைவிட மூத்தவன்; எனினும் உன்னைவிட அறிவில் சிறியவன். உன்னுடைய வாழ்க்கையின் போக்கே அலாதி. எண்ணங்களும் அவ்வாறே. நீ கற்பனையை சிருஷ்டிக்கிறாய். நீ சற்றுமுன் ஆகாயத்தைப்பற்றி சொன்ன கருத்து என்னுடைய மூளைக்கு எட்டாதவை. எனக்கு ஒவ்வொரு சமயமும், நீ சொல்லுகிற விஷயங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றன'' என்றேன்.

"நான் என்ன அப்படி சாதாரணமல்லாதவற்றை சொல்கிறேன்?'' என்றான்.

"கொஞ்சம் பொறு, நீ இவ்வுலகத்தை உன் உடலைப்போல நேசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் எனக்கோ, தொழிற்சாலையைப் பற்றியும், வியாபாரத்தைப் பற்றியும், என் கல்யாணத்தைப் பற்றியும் தான் கவலை. இவ்விஷயங்களெல்லாம் உனக்கு மிகுந்த எரிச்சலை உண்டாக்கலாம். இந்தப் பிடுங்கலகளுக்குப் பயந்து, நீ பிரிந்து போகவும் துணியலாம். நீயோ இன்னும் சிறுவன். இப்பொழுது வாலிப உலகமோ கொந்தளித்திருக்கிறது. நீ அந்த பயங்கர அரசியலில் அகப்பட்டுக்கொள்ளாதே! அகப்பட்டுவிட்டாலோ அநேக வாலிபர்கள் அதற்கு பலியானதைப்போல நீயும் பலியாகக்கூடும். தம்பி! நான் மணம் செய்துகொள்ளப்போகிறேன். அவளிடத்தில் எனது அன்பை ஒப்படைக்க வேண்டும். நான் என்னையே ஒரு பகுதி அவளுக்காக அர்ப்பணம் செய்யவேண்டுமென நினைக்கிறேன். அதனால் நான் கொஞ்சம் யோசிக்கவேண்டி

யிருக்கிறது. ஒருசமயம், எனக்கு உயிர்த்துணைவியாக வருகிறவளிடத்தில் உனக்கு ப்ரீதி இல்லாமல் போய் விட்டாலோ! அது ஒரு துன்பமான நிலை. குடும்பத்தில் ஒரு ஸ்திரி இருப்பது பழைய துணியில் துவாரம் இருப்பதைப் போன்றது! கடுகு நுழையும் இடுக்கில் பெண்கள் யானையைக்கொண்டு செலுத்திவிடுவார்கள். இப்பழமொழிகளை நினைத்தாலே, வேறு கஷ்டமாக யிருக்கிறது. அதற்கப்புறம் குழந்தை குட்டிகள் ஏற் பட்டுவிட்டாலோ ?......... அப்பொழுதெல்லாம் நீ என்ன செய்வாய்? இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்துதான் கோலியா! நான் இன்னும் கல்யாணம் செய்துகொள்ள முடிவுகட்டவில்லை என்றேன்.

"எனக்காக எந்த தியாகமும் செய்யவேண்டாம்" என்றான்.

அவன் சொன்னது அவ்வளவுதான். ஆனால் நான் மட்டும் விடாது பேசிக்கொண்டே போனேன். முடி வில் ஒருவிரையொருவர் எக்காரணத்தாலும் விட்டுப் பிரிவதில்லை; எங்களுக்குள் எதையும் ஒளிவு மறைவு செய்துகொள்வதில்லை என்று நாங்கள் சபதம் செய்து கொண்டோம். வாஸ்தவமாகவே என் சகோதரன் மீது எனக்கு உண்மையான வாஞ்சையுண்டு. இதனால் தான் பனிரெண்டு வருஷங்கள், கூண்டில் அடைபட்ட பிராணியைப்போல் சோப்பு தொழிலைத் தவிர வேறு எதையும் கவனியாது அதிலேயே மூழ்கியிருந்தேன். சாதாரணமாக நான் நகரத்திற்குக்கூட போனதில்லை. கோலியா, இரண்டு மூன்று வருஷங்களில், தான் சோப்புத்தொழிலைப் பார்த்துக்கொள்வதாக ஒப்புக்

கொண்டான். அதற்குள் அவன் கைதேர்ந்த ரசாயன தொழில் நிபுணனுவான் என நினைத்தேன். அவன் அநேக மேல்நாட்டு நூல்களைக்கற்றிருந்தான். அரசியலை யும், வாழ்க்கையையும்பற்றி அவன் படித்திருந் தான். என்றாலும் அவன் தனக்காக நான் எவ்வித தியாகமும் செய்ய வேண்டாமென்று அவன் உண்மை யாக சொன்னது எனக்கு கொஞ்சம் வேடிக்கையாகவே தோன்றியது. நானே எனது வாழ்க்கைத்துணைவியை இழப்பதில்லையென்று உறுதி கொண்டேன். அவளோ என்மேல் காதல் கொண்டவள். நானே எனது சகோ தரன் கோலியாவை பிரமாதமாக நேசித்தாலும் அவனை இழக்க நேரிடுமோ — என்னமோ என்று கலங்கினேன்.

கடைக்காரர்—இவ்விதம் பேசும்பொழுது ஏதோ வேத நூலைப்படிப்பது போல இருந்தது. அவரது திறந்த கண்கள் அப்பொழுது சிவப்பேறி இருந்தன. அவைகளில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது.

அவர் தன் கைக்குட்டையால் கண்களைத்துடைத் துக்கொண்டு, கோப்பையிலிருந்த திராக்ஷாரசத்தை பருகியவராய் "நான் அவனை பூர்ணமாக நேசித்தேன்" என்று சொல்லி மேலும் தொடர்ந்து சொல்லலானர்.

நாடகக்காலமான செப்டம்பர்மாதம் வரையிலும் கோலியாவும், நானும் ஒன்றாக இருந்து, கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு வாழ்ந்தோம். அப்பொழுது கோலி யாவைக்காண அவனது நண்பர்கள் அடிக்கடி வருவார் கள். அவர்களில் ஒருவன் போகோ. அவன் வைத்தியக்

கல்லூரி மாணவன். அற்பன், ஆனல் கெட்டிக்காரன். எனக்கு அவனைக்கண்டாலே பிடிப்பதில்லை. அவன் இஷ்டம்போல் நடப்பதை சுதந்திரம் என்று கூறிவந்தான். என்னுடைய தகப்பனர் உயிருடன் இருக்கும்போது அவர் கண்காணிப்பின் கீழ் இருந்தும் நான், அதிக சுதந்திரமுள்ளவனகவே இருந்தேன். ஆனல் அவர் இறந்த பின், அந்த சுதந்திரமென்பது தாங்க முடியாத பொறுப்புணர்ச்சியை எனக்கு உண்டாக்கி விட்டதென்பது மறுக்கமுடியாத உண்மை. போகோ தன்னுடைய வாழ்க்கைக்குத்தானே எஜமானன் என்றும், தான் எவருக்கும் பதில் சொல்லத்தேவையில்லையென்றும், உலகமே தன்னுள் அடங்கியதென்றும், தனக்குப் புறம்பானது உலகில் எதுவும் இல்லை யென்றும் வாய்ப்பேச்சு பேசிவந்தான்.

அவன் எனது சகோதரனின் ஒரு பயங்கர நண்பன் என்று முடிவுகட்டியிருந்தேன். கருத்து தடித்த புரோகிதனின் மகனை போகோ மெலிந்த என் சகோதரனை அவனது வாய்ப்பேச்சால் மயக்கி வைத்திருந்தான். மனிதன் சுதந்திரமானவன் என்று சொல்லுவது சுத்த அபத்தம் என்பது என் வாதம். மனிதன் தூங்கும்போது கூட அவன் சுதந்திரமாக இல்லை. மனிதன் சுற்றுச்சார்புகளினல் அடிமையாகவே ஆகிவிடுகிறுன் என்பதுதான் என் முடிவு.

என் வாழ்நாள் முழுதும் ஒரே விஷயத்தில் கவனம் மூழ்கிக்கிடந்ததால், என் ஞாபகசக்தி நன்றுகவேயிருந்தது. என்னுடைய வருங்காலம் தெளிவாகவும் தென்பட்டது.

போகோவைத்தவிர, 'யாசிப்போன்' என்ற புனைப் பெயரோடு ஒரு தபால்காரனின் மகனான பாவ்லாவ் என்ற வாலிப மாணவன் எங்களை வந்து அடிக்கடி சந்திப்பான். அவன் மெலிந்தவன். அவனுடைய சிறியதாடி, ஆட்டுக்குள்ள குஞ்சுதாடி மாதிரி இருந்தது. அவன் தமாஷ் பேர்வழி. அவன் தன் தமாஷை பிறர் பார்க்கும் போது புரிந்துகொள்ளாதபடி தங்க 'ப்ரேம்' போட்ட மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தான். அவன் இருக்குமிடம் 'வெங்கலக் கடையில் யானை புகுந்தமாதிரி.' அவன் தொடுகிற காரியங்கள் அனைத்தும், கண்ணாடி பாத்திரமாகயிருந்தாலும்சரி, மரச்சாமான்களாக இருந்தாலும்சரி கிடுகிடுத்துவிடும். அவன் நாடகப் பித்தன். அவன் பத்திரிகைகளுக்கு நாடக உலகத்தைப்பற்றி விமர்சனம் எழுதிக் குவித்து வந்தான். அவனுக்கு எல்லா ரஷ்ய நடிகர்களையும் தெரியும். அப்போது உள்ளூர் தியேட்டருக்கு புதியவர்கள் வருகிறார்களென்றதுமே அவனுக்குஓரே குஷி.

"லாரிஸா! இதுவரை கேள்விப்படவில்லையே! 'எல்'எதனைக் குறிக்கிறது. 'லிடியா' — 'லூசி'—'லாரா'? ......என்ன?'' என்றான் பாவ்லாவ்.

அவனுக்கு லாரிஸாவை அறவே தெரியாது. அவன் குடித்துவிட்டு, தெருவிளக்கின் கம்பத்தில் பலமாக முட்டிக்கொண்ட இரத்தக்காய மண்டைக்கட்டோடு, அவன் தியேட்டருக்கு முதல்நாள் வந்திருந்தான். நானும் சோலியாவும் அன்று போயிருந்தோம்.

கடைக்காரர் அனல்போன்ற பெருமூச்சுவிட்டார். பின் கொஞ்சம் ஒயினைக் குடித்து கண்களை மூடிக் கொள்ளலானார்.

அன்று 'ஹாம்லெட்' நாடகம். லாரிஸா'ஒபிலியா' வாக மேடையில் தோன்றினாள்.

கண்களைத் திறந்து, அவர் மேலும் தொடர்ந்து சொன்னார். எனக்கு என்னமோ நாடகம் என்றாலே பிடிப்பதில்லை. ஒருவன் தன் ஆத்மாவை – மற்றவர் களுடைய குதூகலத்திற்கும், கேளிக்கைக்கும் விற்பது மாதிரி எனக்குப்பட்டது. நான் அதுவரை நாடகத் திற்கு பத்து தடவைகளுக்குமேல் போயிருக்கமாட் டேன்.

நாடகமேடையில் லாரிஸா தோன்றியது எனக் குத் தெரியாது. ஆனால் ஒரு புதிய சாரீரம் என் காதில் விழுந்தது. அப்பொழுது 'ஒபிலியா' நாடகமேடையில் காட்சியளித்தாள். அவள் என்னை ஆச்சரியத்தோடும், புன்முறுவலோடும் நேரே பார்த்தாள். அது நம் வீட்டு அறையின் சிறு துவாரத்தின் மூலம் வரும் அதிகாலை சூரியகிரணத்தை ஒத்தது. அதனை தன்னுடையதென நினைத்து அகமகிழ்ந்து ஒரு குழந்தை தன் கையால் பிடிக்க முயற்சிப்பது போன்றது அவளுடைய பார் வையை நான் வசீகரிக்கஎண்ணியது. லாரிஸாவினுடைய கண்களின் ஒளி கூர்மையாகயிருந்தது. அவளுடைய மேனி ஒபிலியாவின் பொருத்தத்திற்கிணங்க, மீளாத காதல் சம்பவத்தில், நளினமாகவும், அழகாகவுமிருந்

தது. ஹாம்லெட் அவளெதிரே நின்ருன். ‘அஜபை’— அப்பொழுது ஹாம்லெட்டாக நடித்தான். அன்று இரவு நடந்தசம்பவத்தை நான் முழுதும் விவரிக்கமுடியாது. ஆனுல் அன்றுதான் நான் முதல் தடவையாக அழகு தேவதையோடு பூர்ணமாக உறவாடினேன் என்று மட்டும் சொல்ல முடியும்.

பாவ்லாவ், நாடகத்தின் மத்தியிலேயே ‘பலே ஜோர்!’ ‘என்ன ஒய்யாரம்!’ ‘என்ன சிங்காரம்’ ‘என்ன அழகு!’ ‘அடடா!’ என்றெல்லாம் வர்ணிக்க ஆரம்பித்தான். பாவ்லாவ் தன் பக்கத்திலிருந்த நண்பர்களுடைய சட்டைகளையும், கோட்டுகளையும் பிடித்திழுத்து, அவனுடைய உணர்ச்சி வெள்ளத்தை அனைவரும் அறியும்படி, குடிகாரனுகவே கூத்தாடித் தீர்த்துவிட்டான்.

நாடகத்தில்வந்த பைத்தியக்கார காட்சிக்குப்பின் பாவ்லாவ் அழுதேவிட்டேன். அவன் என்னையும், கோலியாவையும் உடனே ‘டிரஸ்ஸிங்’ அறைக்கு அழைத்துப்போனுன். அங்கு அவன் மனதார, வாயார அவளைப் புகழ்ந்து அவள் கையில் முத்தமிட்டான். இந்த வித்தையில் அவன் கைதேர்ந்தவன். நாடக அரங்கில் எந்த புன்முறுவலோடும், எந்தப் பார்வையோடும் அவள் காட்சியளித்தாளோ, அதே காட்சியில் அப்பொழுதும் காணப்பட்டாள். அவளின் அழகிய கண்களில் ஆழ்ந்த அமைதியானஇன்ப ஒளி வீசியது. ஆனுல் அவளது கரங்கள் வாண்டும் கதகதப்பாகவுமிருந்தன.

பாவ்லாவின் புகழுரைகளைக்கேட்ட அவள், லேசாக புன்முறுவல் காட்டி, அதை பொருட்படுத்தாதவள் போல...... "என்னைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றாள்.

அவள் அப்பொழுது என்னோடு பேசுகிறாளென்று நினைத்து நான் பதில் சொல்ல எத்தனித்தேன். ஆனால் கோலியா தனது மிருதுவான வார்த்தையால், "அடடா... என்ன அற்புதம் - என்ன அற்புதம்" என்று கூறினான்.

நாங்கள் இருவரும் அப்பொழுது ஒன்றாகவே இருந்தோம். ஆனால் அதுசமயம் நான் முற்றிலும் என் சகோதரனை மறந்தே இருந்தேன். அவனுடைய பதிலானது எனக்கு குழப்பத்தையூட்டிவிட்டது.

பின் என் சகோதரனோடு வெளியேறினேன். நான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று விரும்பிய பெண் அவளது தகப்பனாரோடு அன்றைய நாடகத்திற்கு வந்திருந்தாள். அவளை வழியில் சந்தித்த நாங்கள் அவர்களுடனே வீட்டிற்குப் போனோம். அவள் எங்களுக்கு உறவு. அவள் மாஸ்கோ சர்வகலாசாலையில் படித்தவள். அவளுக்கு நாடகமென்றால் அலாதிப் பிரியம். அவள் அழகுடையவள். அவள் கன்னங்கள் செங்குழம்பு போன்றவை. அவள் எப்பொழுதும் உற்சாகத்துடன் குதூகலமாயிருப்பாள். அவளுக்கு இனிப்பு மிகப் பிரீதி. அவளுக்கு லாரிஸாவினுடைய நடிப்பே பிடிக்கவில்லை.

"எல்லையற்ற அழகுடையவள் நடிப்புக்குப்போகக் கூடாது. அவளின் ஒய்யார நடையே தனி அழகு......" என்றாள் அவள்.

இதைக் கேட்டதும் கோலியா என்னை மணக்க இருந்த அப்பெண்ணோடு விவாதத்திற்கே கிளம்பிவிட்டான். அவள் கருத்தில் ஓரளவு உண்மையிருந்தது.

கோலியாவுக்கு நாடகக் கன்னியின் மீதேற்பட்ட ப்ரேமை அதிக பணச்செலவை உண்டாக்கிவிடுமோ வென்று பயந்தேன். ஏனெனில் பெண்களின் மயக்கத்தில் — கோலியா எங்கே வெகுமானங்களை அள்ளி அள்ளி வீசி விடுவானோவென்றுதான்.

எனக்கு பெண்கள் பைத்தியமென்றாலே கொஞ்சம் யோசனைதான். அந்த தொத்துநோய் என்னையும் பிடித்துவிடுமோவென்ற யோசனை வேறு. நான் மிகவும் கட்டுப்பாடோடுதான் இருந்தேன். எங்கள் தொழிற்சாலையில் ஒரு யௌவன தையல்காரி இருந்தாள். அவள்......நல்லவள். ஆனால் பாவம் அவளோ, வெறி பிடித்த நாய் கடித்து இறந்துவிட்டாள்.

நாங்கள் வீட்டிற்குள் போனோம். கோலியா வழி நெடுக மகிழ்ச்சியுடனேயே வந்தான். ஆனால் அவனும் என்னைப்போலவே கடைசி வரையிலும் மௌனம் சாதித்துவந்தான். வீட்டில் தேநீர் குடித்தானதும், வழக்கம்போல் நாங்கள் மனம்விட்டுப் பேசினோம்.

“ நான் லாரிஸாவை விரும்புகிறேன். அவளை அடைய முயற்சிக்கப்போகிறன். அவளை அடையும் முயற்சியில் எப்படியும் நான் வெற்றிபெறுவேன்” என்றேன்.

நான் இவ்விதம் காரணார்த்தமாகத்தான் சொன்னேன். ஆனால் நான் சொன்ன அளவுக்கு எண்ணியதில்லை. பெண்களுடைய உயரிய உள்ளத்தைப்பற்றி நான் பேசியதுமே — கோலியாவுக்கு கோபம் பொங்கி வழிந்தது. நான் மற்றும் ஏதோ பரிகாசம் செய்தேனென்றாலும் — அவனுடைய திறமையை நான் மதிக்கவில்லை. அவன் கடைசியில் கோபமாக படுக்கைக்குப் போய்விட்டான். பின் நானும் படுக்கச் சென்றேன். தூங்க முயன்றேன். ஏதோ கொஞ்சம் தூங்கியிருப்பேன். ஆனால் நடுநிசியில் விழித்துக்கொண்டேன். பின் தூக்கம் வர மறுத்தது. அப்பொழுது எனக்கு கடவுள் ஒருவன் இருக்கிறான் என்று பட்டது. மனிதனுடைய தொந்தரவுகள் கடவுளை ஆட்டியசைக்குமென்று கருதினேன். ஆனால் லாரிஸாவைப் பற்றிய எனது நினைவெல்லாம் கனவாகப் போய்விடவேண்டுமென்றும், கோலியாவின் பெண் பித்தமும் மாயமாய் மறைந்துவிடவேண்டுமென்றும் பிரார்த்தனை செய்துகொண்டேன்.

அன்று இரவு பௌர்ணமி என்று ஞாபகம். தெருவில் நாய்கள் குரைத்துக்கொண்டிருந்தன.

ஒருநாள் கழித்து நாங்கள் மீண்டும் தியேட்டருக்குப்போனோம். அன்று லாரிஸா ‘டாம் ஆக்ஸ்

'கெமலெ'யாகத் தோன்றினுள். அது அவ்வளவு நல்ல நாடகமல்ல. எனினும் லாரிஸா தன் நிகரற்ற அழகால் அனைவரையும் கவர்ந்துவிட்டாள்.

லாரிஸாவைப்பற்றி, அன்று என்னை மணக்க விரும்பிய பெண் சொன்னது சரி. லாரிஸாவுக்கு நிகர் லாரிஸாதான். அவள் நாடகத்துக்கு உரியவளில்லை. கோலியாகூட "'கெமலெ'யாக நடிப்பது அவள் வேலையல்ல. அவளுக்கு பொருத்தமற்றது" என்றுன்.

நாடகத்தின் நடுவில் பாவ்லாவும் நானும் அவளைப் பார்க்கப் போனோம். அவள் அப்பொழுது உடைமாற்றிக்கொண்டிருந்தாள். எங்களை வர அனுமதிக்கவில்லை. ஆனுல் அவள் ரோடுக்கு சமீபத்தில் தனக்காக வாடகைக்குப் பிடித்திருந்த வீட்டிற்கு வரச் சொன்னுள்.

அன்றுதான் முதல் தடவையாக நான் பல புதிய அறிமுகமற்ற மனிதர்கள் கூடியிருந்த இடத்திற்குச் சென்றேன். இருந்தாலும் அங்கு போலீஸ் சூப்ரெண்டெண்டு மாம்தகுலாயும், ஒரு பழைய குதிரைக்காரனும் எனக்கு தெரிந்தவர்களாகவேயிருந்தனர்.

அங்கிருந்த சாமான்களெல்லாம் ஒரு ஒழுங்கு முறையாகவே காணப்படவில்லை. மேஜைகள் குறுக்கும் நெடுக்குமாக கிடந்தன, புஷ்பங்கள், புஷ்ப ஜாடிகளில் வைக்கப்படாமல் மேஜை மீதும், விரிப்புத்துணிகள் மீதும் கிடந்தன.

அங்கிருந்தவர்களோ அவர்களுக்குத் தோன்றியதை அவரவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். அவரவர்கள் தாங்கள் தாங்கள் சொன்னதையே பிடிவாதம் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அதில் அவர்கள் கடவுளைப்பற்றியும்,காதலைப்பற்றியும் நடத்திய சம்பாஷணை கேட்பதற்குக் கர்ணகடூரமாகவும், பிரயோஜனமற்றதாகவும் இருந்தது. இந்த இரைச்சலில் பாவ்லாவும் கலந்துகொண்டான். ஒரு தொழிற்சாலையில் சிறந்த மெக்கானிக் மாதிரி பாவ்லாவ் இதில் பிரதான மனிதனுக காணப்பட்டான். அங்கு நடந்த ஒரு ருசிகர சம்பாஷணை இன்னும் எனக்கு நினைவிலிருக்கிறது. ஆனுல் கோலியா இதில் பங்கெடுத்துக்கொண்டதுதான் குறிப்பிடத் தக்கது. இதனை நான் எதிர்பார்க்கவேயில்லை.

லாரிஸா இதில் நடுநாயகமாக காணப்பட்டாள். அவள் சிகப்புநிற ஆடை உடுத்தி ஒரு கோணத்தில் அமர்ந்திருந்தாள். அவள் மார்பு தவழ புஷ்பங்களை வைத்திருந்தாள். அவளுக்கு பக்கத்தில் ஹாஸ்ய நடிகனுன பிராகின் உட்கார்ந்திருந்தான். அவன் அவளிடத்தில் அப்பொழுது விஸ்வாசமுள்ளவனுக இருந்தான். அவனுடைய உருவம் மனித எலும்புக்கூடுபோல் தசையெல்லாம் ஒட்டிக் காணப்பட்டது. அவன் அதுவரை இயேசுவை கதாநாயகனுகக்கொண்ட நாடகம் நடத்தப்படவில்லையேயென்று கவலைப்பட்டான். அப்படி நடத்துவதானுல் தான் அதில் கிருஸ்துவாக இருக்கச் சம்மதித்தான். லாரிஸாவோ தான் மக்தலேனின்மேரியாக நடிப்பதாகச் சொன்னுள்.

"நாடகமேடைகளில் மதசம்பந்தமான நாடகங்கள் நடத்தக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருப்பது சரியல்லவென்றும், கடவுள் நம்பிக்கை வரவர குறைந்து கொண்டிருக்கும்பொழுது நாடகமேடைகளை அதற்காக உபயோகப்படுத்துவதே பொருத்தமென்றும்" மாம்தகுலாப் சொன்னான்.

"கடவுளை நம்புகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் குரூரமானவர்கள்; யோக்கியமற்றவர்க"ளென எங்கிருந்தோ கோலியா உரக்கச்சொன்னான்.

இந்த பேச்சிலிருந்து கூட்டத்தில் ஒரு அதிருப்தி ஏற்பட்டது. நானே அவனைப் பார்த்து 'வாயை மூடு' என்று சொல்லலாமென்று நினைத்தேன். ஆனால் சும்மா இருந்துவிட்டேன். ஆனால் சிலர் அவன்மீது ஆத்திரங்கொண்டு அவனைப் பேசமுற்பட்டார்கள்.

அதற்குள் லாரிஸா எழுந்து "ஏன் அப்படி கருதுகிறீர்கள்? தெளிவாக விஷயத்தைச் சொல்லுங்களேன்" என்றாள்.

"என்னால் அவ்விஷயத்தை தெளிவுபடுத்த முடியாது. ஆனால் நான் அவ்விதமே உணர்கிறேன். அது என் ஆழ்ந்த அபிப்பிராயம்" என்றான் கோலியா. இப்பதில் அங்கிருந்தவர்களுக்குச் சிரிப்பையூட்டியது.

ஹாஸ்ய நடிகனான பிராகின் யூதர்களைப்பற்றிய விநோதக் கதைகளைச் சொல்லலானான். சாப்பாட்டிற்கு உப்பும் மிளகும் எவ்வளவு அவசியமோ அதே

போல் நம் சமுதாயத்தில் யூதர்களும் அவ்வளவு அத்தியாவஸ்யமானவர்கள் என்பது என் அபிப்பிராயம். அவர்களை நடிகர்கள் கோஷ்டி கிண்டல் செய்வது சரியல்லவென்றே கருதினேன்.

அதோடு குடிப்பழக்கத்தில் ஈடுபடுகிறவர்களில் நடிகர்கள் பெருங்குடியர்களாகி விடுகிறார்களென்பது என் அபிப்பிராயம். நான் அப்பொழுது பிராகினிடம் லாரிஸாவைப்பற்றி மெதுவாக விசாரித்தேன்.

அவன் சொன்ன பதிலிலிருந்து, அவள் செல்வச் சீமாட்டியென்றும், அவளுக்கு பூஸ்திதி உண்டென்றும், அவள் கணவன் தெற்கே ஆட்டுப் பண்ணைகள் வைத்திருக்கிறானென்றும் அறிந்தேன். என்றாலும் அவளுக்கு ஏற்பட்ட நாடகமோகத்தால் அவள் அவனை விட்டுப் பிரிந்துவிட்டாள் என்றும், இரண்டு வருஷங்களாக நாடகத்தில் நடிக்கிறாள் என்றும், ஆனால் அவளுக்கு ஆண்களிடத்தில் மோகம் கிடையாதென்றும் சொன்னான்.

பிறகு "உங்களுக்கு ஸ்டேரோஷ்னா என்ற நடிகை மிக ஏற்றவள். அவள் சுதந்திரமாக பழகக்கூடியவள். கன்னிப் பருவமுள்ளவள்" என்றுகூறினான் பிராகின்.

"இல்லை... இல்லை .. எனக்கு அவசியமில்லை. ஆனால் என் சகோதரன்......"

"அவளுக்கு யாராயிருந்தாலும் அக்கரையில்லை. போதிய குணபாவங்கள் இருந்தால் யாரையும் விடமாட்டாள்" என்றான்.

இதிலிருந்து பிராகின் ஒரு அயோக்கியன் என்று உணர்ந்து அவனோடு பேசாதிருந்துவிட்டேன். ஆனால் பிராகின் கொழுகொழுவென்றிருந்த ஸ்டேரேஷ்னு வின் முகத்தின்மீது புஷ்பத்தை எறிந்து கோலியா பக்கம் ஜாடை காட்டினன். கோலியா அதுசமயம் லாரி ஸாவோடு ஜோராகப் பேசிக்கொண்டிருந்தான். அப் பொழுது மாம்தகுலாப், "வாலிபர்கள் சதா அரசியலைப் பற்றியும், மதத்தைப் பற்றியும் வம்பளந்துகொண்டு கேள்விகளைக்கேட்டு தொந்திரவு செய்கிறார்கள். ஆனால் பாரிஸ் நகரத்திலோ, வாலிபர்கள் படிக்கிறார்கள், காதல் புரிகிறார்கள்" என்றான்.

இதைக்கேட்ட லாரிஸா வெறுப்படைந்தாள். பாவ் லாவ் தன் ஆட்டுத்தாடியை மதபோதகர் மாதிரி அசைத்துக்காட்டி "உலகின் எயோலியன் முகப் பிலிருக்கும், ரஷ்யர்களாகிய நாங்கள் வாழ்வின் சகலத் தையும் விரும்புகிறோம்" என்றான்.

அப்போது ஸ்டேரேஷ்னு கோலியாவை கையோ டணைத்து பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்றாள். ஆனால்நாங்கள் வீடு திரும்பியதும் ஸ்டேரேஷ்னுவைப் பற்றி கேட்டதும், "அவள் அசிங்கம் பிடித்த கழுதைக் குட்டி" என கொச்சையாகக்கூறி, "லாரிஸா மேன்மை யானவள். மகா புனிதை. அவள் மனதில் ஏதேதோ முக்கியவிஷயங்கள் ஆழ்ந்து கிடக்கின்றன" என்றான்.

அவன் அவளைப்பற்றி மிக அபாரமாக புகழ ஆரம்பித்துவிட்டான். அந்த அளவுக்கு என்னால் புகழ்

மாலை சூட்ட முடியாததற்கு வருந்தினேன். அதோடு கூட கோலியாவுடைய புகழ்மாலைகளையெல்லாம் லாரிஸா கேட்டால், அவள் எப்படி ஆகிவிடுவாளோ என்ற கவலை வேறு ஏற்பட்டது.

"நீ அவளை இரண்டு தடவைதானே பார்த்திருக்கிறாய்?" என்றேன்.

இது பெருநெருப்பில் சுண்டுவிரலால் தண்ணீர் தெளித்தது மாதிரிதான்.

கோலியா அவள்மீது அன்பு கொண்டிருந்தான். கோலியாவைப் பார்க்க போகோ நாள் தவறாது வந்து போய்க் கொண்டிருந்தான். நான் கோலியாவுக்கு மாதச் செலவுக்காக நூறு ரூபிள்கள் வேறு கொடுத்துக் கொண்டுவந்தேன்.

இவ்வாறு சொல்லிக்கொண்டே எழுந்து, கதவருகில் சென்று நின்றார். அங்கு சுவற்றில் மாட்டியிருந்த 'கயித்தார்' வாத்தியத்தை சில நிமிஷ நேரம் உற்று நோக்கினார்.

"இந்த வாத்தியம் லாரிஸாவுடையது. ஆனால் இதை நன்றாக வாசிக்க அவளுக்குத் தெரியாது" என்று கூறி மீண்டும் நாற்காலியில் அமர்ந்தார். பின் கோப்பையிலிருந்த ஒயினை அருந்தி முன்போலவே நாற்காலியில் சாய்ந்துகொண்டு கூறினார்.

"நம்முடைய தகப்பனார் இறந்தபின் நாம் ஒளிவு மறைவின்றி எல்லா விஷயங்களைப்பற்றியும் பேசுவோம்

என்று உறுதி செய்துகொண்டோமல்லவா?'' என்று கேட்டேன்.

"ஆமாம் எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆனால் நீங்கள் நம் தந்தையாருடைய ஸ்தானத்தை வகிக்கப் பிரியப்படுகிறீர்கள் என்று அப்பொழுது நினைத்தேன். அந்த அந்தஸ்தைக்கொண்டு, என்மீது தங்கள் இஷ்டத்திற்கான ஒரு வாழ்க்கையைத் திணிக்க முற்படுகிறீர்களென்றும் கருதினேன். நான் அப்பொழுது சிறுவனாதலால்-தங்களிடம் எதிர்த்துப்பேசத்துணியவில்லை.''

"நம்முடைய தொழிலாளர்களின் வறுமை நிலையைக் கண்டும் - அவர்களின் கேவல வாழ்க்கையைக் கண்டும், நான் பெரிதும் வெட்கப்படுகிறேன். இந்த உண்மைகளை பத்திரிகைகள், புட்டுப்புட்டுக் காட்டுகின்றனவே'' என்று ஒரு அபலான் போல, புதுத் தோரணையில் பேச ஆரம்பித்தான் கோவியா.

அவன் மளமளவென்று வாலிபமுறுக்கில், ஆனால் அனுபவக் குறைவோடு அரைமணி நேரம் பேசித் தீர்த்தான்.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய முயன்ற பொழுது, எங்கள் தந்தை கொடுத்திருந்த ஒரு தங்கக் கடிகாரத்தை, கோவியா அறுநூறு ரூபிளுக்கு விற்று, வேலைநிறுத்தத்திற்கு ஆதாரவாக வசூல்செய்த போகோ மூலம் அப்பணத்தைக் கொடுத்திருந்தசெய்தி கேட்டு திடுக்கிட்டேன். ஒரு எஜமானனே — தன்

தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்த சகாயம் செய்வது ஆச்சரியமல்லவா? அது சிறுபிள்ளைத்தனம்......... ஆனால் "கோலியா – நான் உன் மீது பிரியமாக இருக்கிறேன் என்பதை ஒத்துக்கொள்கிறாயா? இல்லையா? என்றேன்.

"எனக்கு பிரியமோ, அன்போ தேவையில்லை. எனக்கு வேண்டியது சுதந்திரம்தான்" என்றான்.

"கோலியா – உனக்கு லாரிஸாமீது அன்பு உண்டு என்பது எனக்குத் தெரியும்......இதெல்லாம் அதனுடைய விளைவுதான்" என்றேன்.

"அது அத்தனையும் என்னைப்பொருத்த விஷயம்" என்றான்.

நான் அப்பொழுது, வேறு விதமாகப் பேசலானேன்.

"தம்பி! – அவள் வருஷப்பிறப்பிலிருந்து என் காதலியாகிவிட்டாள்" என்றேன்.

அந்த வார்த்தைகள் அவனை திடீரென்று தூக்கி வாரிப்போட்டன. அவன் உடல் வெளுத்துவிட்டது. அவன் சரீரமனைத்தும் நடுங்கிவிட்டது. கடைசியில் சமாளித்துக்கொண்டு "அப்படி ஒருக்காலும் இருக்க முடியாது. அது உண்மையாகவுமிருக்காது" என்றான்.

ஆனால் நான், அவன் நம்புகிற அளவுக்குப் பொருத்தமாக சில விஷயங்களைச் சொன்னேன். கோலியா அவற்றை நம்பி, மெதுவாக படுக்கை அறைக்குப் போய்விட்டான். அவன் உள்ளத்தில் பீதியும், குழப்பமும் ஏற்பட்டு விட்டன. அவ்விதம் செய்தது சரிதானா?

அங்கு நாடகக் காலம் முடிவுக்கு வரும் தருணம்; அந்த காலத்திற்குள் லாரிஸாவும், நானும் சிநேகிதர்களாகிவிட்டோம். அப்பொழுது அவளுடைய ஆழங்காணா எல்லையற்ற அழகுக் கடலில் மயங்கித் திளைத்திருந்தேன்.

அவள் தன்னுடைய பெருவாரியான பணத்தை நாடகத் தொழிலில் போட்டிருந்தாள். நான் தொழில் முறையில் அவளுக்கு தக்க ஆலோசனைகளைச் சொல்லி வந்தேன். அவள் என்னுடைய நேர்மையையும், நாணயத்தன்மையையும் பாராட்டினாள். ஒரு நாள் பகல் சாப்பாடு முடிந்த தருணம் என் சகோதரன் அவளிடம் காதல் கொண்டிருந்த விஷயத்தைக் கூறினேன். முதலில் அவள் அதை பொருட்படுத்தவில்லை. ஆனால் "தாங்கள் எந்த முறையில் இங்கு இருக்கிறீர்கள் — தங்களுடைய சகோதரனின் சார்பாகவா — அல்லது அவருடைய விரோதியாகவா?" என்று சொல்லி திடீரென்று கோபத்தோடு முகத்தை முறித்துக் கொண்டு "எத்தனையோ வாலிபர்கள், வயோதிகர்கள், சிப்பாய்கள், உத்தியோகஸ்தர்கள், புரட்சிக்காரர்கள்,

அரசியல்வாதிகள் என் மீது வேண்டியமட்டும் காதல் கொண்டிருக்கிறார்கள்'' என்று கூறி, ''நான் என்னுடைய வேலையை திறமையோடு செய்ய நீங்கள் விட மாட்டீர்கள் போலிருக்கிறதே! எவருடைய காதலும் அன்பும் என்னை ஒன்றும் செய்துவிடாது''என்றாள்.

அவள் அப்பொழுது சோபாவில் கால்களை நீட்டி உட்கார்ந்திருந்தாள். செம்பரத்தை புஷ்பத்தின் நிறத்தை ஒத்த, சிவந்த வெல்வெட் துணிகளை அணிந்திருந்தாள். அவளுக்கு வெல்வெட் என்றாலே அலாதி ஆசை. அவளுடைய அடர்ந்த கூந்தல் அவள் முதுகில் புரண்டு தவழ்ந்தது. அவள் கோபப் பார்வையோடு, ''என்னை தொந்திரவு செய்யாதீர்கள். நான் வெளியூருக்கு சீக்கிரமே புறப்படப் போகிறேன். வரும் கோடை காலத்தில் லிப்ட்ஸ்க் நகரத்தில் நாடகமாடுவேன். அதற்குள் உங்கள் சகோதரனுக்கு ஏற்பட்டிருக்கும் அம்மை நோய் குணமாகிவிடும். அம்மை இந்த வயதில் அவரை ஒன்றும் செய்துவிடாது'' என்று கூறினாள்.

அவளுடைய வார்த்தைகள் எனக்கு நம்பிக்கையை ஊட்டின. அப்போது அவளிடம் நான் அளவற்ற ப்ரேமை கொண்டிருந்தேன். அச்சமயம் அதை நான் அவ்வளவாக உணரவில்லை. ஆனால் அவளை முதல் தடவையாகக் கண்டது முதலே, காதலித்துவிட்டேன் என்பதை இப்பொழுது உணர்ந்தேன். எல்லாம் திடீர்......எல்லா சம்பவங்களும் திடீரென்றுதான் ஏற்படுகின்றன. எல்லாம் திடீர்........'' அதற்குமேல் அவர் பேசவில்லை. மௌனமாக இருந்தார்.

அப்பொழுது நான் "அவள் உண்மையிலேயே அழகுள்ள மங்கையா?" என்று கேட்டேன்.

அவர் அவளுடைய படத்தைப் பார்த்துக் கொண்டே "உங்களால் பார்க்க முடியாதா என்ன? மற்றவர்களுக்கு வேண்டுமானால் அவள் அவ்வளவு அழகுள்ளவளாகக்காணப்படமாட்டாளோ என்னவோ! ஆனால் நாங்கள், உலகிலேயே அழகுக்கு முதன்மை யானவளையே காதலித்தோம்" என்று கூறி அவர் மேலும் சொன்னார்: "அவள் தன்னுடைய சகல நிர்வாகத்தையும், என்னிடம் ஒப்புவித்துவிட்டு லெண்ட் பண்டிகையின் முதல் வாரத்தில் வெளி யூருக்குப் பிரயாணமானாள். அவளோடு மலையளவு மாலைகளும் சென்றன. அவளை அனுப்பிவைக்க எண் ணற்றோர் கூடினர். ஒரு லாயர் என்னிடம் பொறுமை யோடு 'நீ ஒரு அதிர்ஷ்டக்காரன்' என்றார்."

என்னுடைய அதிர்ஷ்டமெல்லாம் ஒரே ஒரு தடவை அவள் கையை முத்தமிட்டதுதான். அதனை நான் மிக தைரியமாகச் செய்யவேண்டியிருந்தது. ஆனால் அவளை வழியனுப்ப கோலியா வந்தபொழுது அவள், "அருமைப் பையனே! சந்தோஷமாயிரு" என்று சொல்லி உச்சந்தலையில் முத்தமிட்டாள்.

கோலியாவும் நானும் ஏகாந்தமானோம். அவன் இரவு பகலாக புஸ்தகங்களைப் படித்துப்படித்து இளைத் துப் போய்க்கொண்டிருந்தான். போகோ மட்டும் வழக் கம்போல் வந்துபோய்க்கொண்டிருந்தான். ஒரு நாள் தேநீர் குடித்ததும்,

"கோலியா! எனக்கு அதிர்ஷ்டம் வந்தால்"

"அதனால் எனக்கென்ன! நான் மன சந்துஷ்டியில்லாமலிருக்கிறேன். அதற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை" என்றான்.

இக்காலங்களிலெல்லாம் கோலியா புத்தகப்பூச்சியாகிவிட்டான். எனக்கு அவனுடன் பேசுவதற்குக் கூட வாய்ப்பு கிடைப்பது அரிதாகிவிட்டது. இவ்வாறே மாரிக்காலமும், கோடைக்காலமும் கழிந்தன.

ஜூன் மாதத்தில் லிப்ட்ஸ்க் நகரத்திற்கு 'லாரிஸா வந்தாள். அவளைப் பார்க்க கோலியா உடனே சென்றான். நான் அதுசமயம் ஆறு நாள் வரை மன சஞ்சலமடைந்திருந்தேன். என்னுடைய புருவங்கள் பீதியால் அடிக்கடி துடித்தன. எனக்கேற்பட்டிருந்த பீதி எனக்கே தெரிந்தது. ஆறுவது நாள் லாரிஸாவிடமிருந்து எனக்கு அம்புபோல் ஒரு கடிதம் வந்தது.

அதில் "நான் தங்கள் மனைவி என்று நீங்கள் தற்பெருமையடித்துக் கொள்வதாக உங்கள் சகோதரர் கூறுகிறார். அது உண்மையானால் உடனே பதில் எழுதுங்கள். தங்களை நான் யோக்கியர் என்று கருதுகிறேன். அதனால், உடனடியான பதிலை எதிர்பார்க்கிறேன்" என்று கண்டிருந்தது.

நான் யோக்கியன் என்ற முறையில் பதில்கூற முயலவில்லை. அவள் பொருட்டு நான் என்னைக் காதலித்து, விரும்பி கல்யாணம் செய்துகொள்ள நினைத்த

பெண்ணை இழந்தேன். அவள் பொருட்டு என் சகோதரன் மீதிருந்த அன்பையும் இழந்தேன். அவள் பொருட்டு என் வாழ்க்கையும் சிதறுண்டதாக உணர்ந்தேன். என்றாலும், முடிவாக 'இல்லை' என்ற ஒரே வார்த்தையில் தந்தி யொன்றை நான் அவளுக்குக் கொடுத்தேன்.

இப்பொழுது கடைக்காரர் சத்தியப் பிரமாணம் செய்பவரைப்போல எழுந்து அழுத்தமான குரலில் "நான் வேறுவித பதிலை சொல்லியிருக்க முடியாது என்றால் வேறு எப்படித்தான் பதில் சொல்லமுடியும்" என்றார்.

அவர் கண்களிலிருந்து நீர் தாரையாக வழிந்தது. கண் தெரியா குருடரைப்போல என்னைப் பார்த்தார். அப்பொழுது அவர் தொண்டையும் அடைத்துக் கொண்டது. பின் தொண்டையைக் கனைத்து சரி செய்துகொண்டு சொன்னார்.

கோலியா ஏதாவது செய்வானென்று நினைத்தேன். லாரிஸாவும் அவனுடைய வாலிபத்திற்கு வசப்பட்டுவிடுவாளோவெனக் கருதினேன். ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகு கோலியா ஸ்டேஷனிலிருந்து நேரே என் ஆபீஸுக்கு வந்தான். அவன் கோட்டைக் கழட்டாமல், தொப்பியையும் தலையினின்று எடுக்காமல் சிப்பாயைப் போன்று விறுவிறுப்போடு ஆனால் குடிகாரனைப்போல் என்னிடம் நெருங்கிவந்து "பீட்டர், நீ ஒரு அயோக்கியன்" என்றான்.

"நான் சொல்வதை கவனமாகக்கேள். நானும் அவளைக் காதலித்து சஞ்சலமடைந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியாததா? நீ அவள் அழகிலிருந்து மீளமாட்டாயென்று நினைத்தேன். நான் உன்னை அன்போடு நேசிக்கிறேன். ஆனாலும் அவளுடைய அழகில் நீ அதோகதியாகிவிட்டாலும் அதற்காக வருந்துவதற்கில்லை. அதற்காக யார் தான் என்ன செய்ய முடியும்? என்றேன்.

அவன் தன் தொப்பியைக் கழற்றி ஆசனத்தில் உட்கார்ந்து என்னை முறைத்துப்பார்த்தான். அவன் முகம் கருத்திருந்தது. அவன் பீதியும் குழப்பமுமடைந்திருந்தான். அவன் கண்கள் வெறுண்ட பார்வையைக் காட்டின.

நான் மேலும் சொன்னேன். "நீயோ அழகுள்ளவன், என்னைவிட அறிவுள்ளவன் ஆகையால் அவள் உன்னை காதலிப்பதும் சுலபம். அவளிடத்தில் நீ பொருத்தமாகவும் பேசக்கூடும். எந்தப் பெண்களின் ஹிருதயத்தையும் நீ சுலபமாகத் தொடக்கூடும். உன்னுடைய காதலோ கற்பனை சிருஷ்டியின் உன்னதம். ஆனால் என் விஷயமோ சதையும், இரத்தமும் போன்றது........"

கோலியா எழுந்து அறைக் கதவைப் பூட்டிவிட்டு வந்து உட்கார்ந்தான். எங்கே அவன் என்னை நையப் புடைத்துவிடுவானோவென்று ஒரு நிமிஷம் நினைத்தேன். ஆனால் அவன் என்னைக் கட்டிப் பிடித்துக்

கொண்டு "நான் எப்படி வாழ்வது? நான் என்ன செய்வது?" என்ருன்.

நான் அப்பொழுது என் முகத்தை அவன் முகத்தோடு வைத்திருந்தேன்.

"என்னை என்ன செய்யச் சொல்கிருய்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே" என்றேன்.

இப்பொழுது என் இதயத்தில் மீண்டும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அவன் என்னைவிட விவேகமாக நடந்து கொள்வானென்று உணர்ந்தேன். அது எப்பொழுதும் எனக்குத் தெரிந்ததேயென்ருலும் அப்பொழுது நான் பலமாக உணர்ந்தேன். எங்களுக்குள் எல்லாம் சுமுகமாகப் போய்விடுமென்ற ஒரு புது உணர்ச்சி தோன்றியது.

"எனக்கு ஒன்றும் புரியவில்லை, நீ என்னைவிட விவேகமானவன்" என்று மீண்டும் சொன்னேன்.

"நம் இருவரையுமே ஏன் அவளிடம் குறைவு படுத்தி விடுகிருய்" என்ருன்.

என்ஞல் அதற்கு பதில் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை. "நான் ஏன் அப்படி நடந்துகொண்டேனென்று எனக்கே புரிந்துகொள்ளமுடியவில்லை" என்றேன்.

அவன் எழுந்து அறையில் உலாவிக்கொண்டே தான் கொஞ்ச காலத்திற்காவது வேறு ஒரு சர்வகலாசாலைக்குப் போய்விட வேண்டுமென்ருன்.

“அப்படியொன்றும் அவயசிமில்லே. நான் உன்னோடு சேர்ந்தே இருக்கப் பிரியப்படுகிறேன். நீ என்னை விட்டுப்போக நேரிட்டால், நான் கஷ்டத்திற்குள்ளாகி விடுவேன். லாரிஸாவுக்கு தொழில் முறையே இன்னதென்று தெரியாது. அவள் எது கேட்டாலும் என்னால் மறுக்க முடியாது” என்றேன்.

அவன் சிரித்துக்கொண்டே “நீ அவளை என் மீது அவநம்பிக்கை கொள்ளும்படி செய்துவிட்டாய். இந்நிலையில் நான் என்ன செய்யமுடியும்?” என்றான்.

“ஏதோ தவறுதலாக நடந்துவிட்டது. இனி மேல் எந்த தவறும் நடக்காது. அவள் உன்னைப்பற்றி தவறாக நினைக்காத அளவுக்கு நான் அவளிடம் பேசித் திருப்பிவிடுகிறேன்” என்றேன்.

கோலியா இதற்கு உடன்பட்டான். இருந்தாலும் “நீ பெரிய திருடன்” என்று பரிகசிக்கவும் செய்தான்.

அப்பொழுதும் கடைக்கு வெளியே மழை தூறிக் கொண்டுதானிருந்தது. மீண்டும் அவர் ஏதோ சத்தியப் பிரமாணம் செய்பவர்போல் எழுந்து “என் சகோதரன் ஒரு அபூர்வமானவன். ஹிருதய சுத்தமுடையவன். உயர்ந்த தன்மை பூண்டவன்” என்று கூறினார்.

அச்சமயம் தெரு விளக்குக் கண்ணாடியின் பக்கத்தில் சிலந்தியொன்று தன் வலையை பின்னிக்கொண்டிருந்தது. கடைக்காரர் இன்னும் ஒயினைப் பருகியவராய்ப் பேசலானார். ஆனால் அவ்வொயின் அவருக்கு எவ்விதப் பயனையும் அளிக்கவில்லை.

இதற்குப் பிறகு கோலியாவும் நானும், புதிதாக அறிமுகமானவர்களைப்போல பழகிவந்தோம். இராக் காலங்களில் வாழ்க்கையின் பல்வேறு பிரச்னைகளைப் பற்றி ஆராய்வோம். வாழ்க்கை மணல்மேல் கட்டப் பட்ட மண் கோபுரம் போன்றது என்று கோலியா அழகழகாகப் பேசிவந்தான். நான் அதை உண்மை யென்று ஒத்துக்கொண்டேன். நான் கோலியாவோடு, லாரிஸாவைப்பற்றிப் பேசவில்லை. ஆனால் அவன் பாவ் லாவிடம் பேசிக்கொண்டிருக்கும்போது, "லாரிஸா வினுடைய திறமையே அவளுடைய அழகில் பொதிந்து விட்டது. அவளுக்கு நாடக அரங்கில் சரியான ஆற்றல் இல்லை. அவள் நாடகத் தொழிலை மேற்கொண்டதே தவறு. அவள் தன் தவறை உணர்வாள் என்று கருது கிறேன்" என்றான்.

பாவ்லாவ் இதனைக்கேட்டுக் கேலியாகச் சிரித் தான்; பரிகசித்தான்; ஆடிப்பாடிக் கூத்தடித்தான். ஆனால் கோலியாவின் விவேகப்பேச்சு எனக்கு மகிழ்ச்சி அளித்தது. நான் அவன் சொன்னதை நம்பினேன். லாரிஸாவின் நாடகத்திறனைப்பற்றி எனக்கு புரிந்து கொள்ளமுடியாமலிருந்தது. ஏனெனில் அவளுடைய நடிப்பைப் பற்றிய கவலை எனக்கு ஏற்பட்டதில்லை. அவள் நாடகமேடையில் தோன்றும் பொழுதெல்லாம், நான் அவளிடமே கண்ணையும், கருத்தையும் ஒருங்கே பறிகொடுத்திருந்தேன். அவளுடைய சாரீரத்தைக் கேட்டிருக்கிறேன். அவளுடைய அழகிய சரீரம் ஆகாய வெளியில் மிதப்பதைப்போன்று பார்த்திருக்கிறேன்.

அவளுடைய மிருதுவான நடை அழகே ஒரு தனி சோபிதம். அவளுடைய கால்களும்.........அழகிய மார்பும்.........ஆ...ஹா...!

நான் இப்பொழுது என்ன சொன்னேன் ? ஓ ! அவள் கோலியா சொன்னதுபோல் நாடகத் தொழிலை மேற்கொண்டது தவறானது என்று உணர்ந்து என்னோடு வந்து விடுவாளென்று கருதினேன்.

அவள் வந்ததும் அவளைப் பார்க்கப் போயிருந்தேன். அவள் மிகவும் களைப்புடன் காணப்பட்டாள். அந்த கோடைக்கால சமயத்தில் அவள் முப்பதினாயிரம் ரூபிள்களை இழந்திருந்தாள். நான் அவளைத் திருப்திப் படுத்துவதற்காக அவள் கொடுத்திருந்த தொகையை தொழிலில் ஈடுபடுத்தியதில் கொழுத்த லாபம் கிடைத்ததாகச்சொல்லி நான் அதற்காக அந்த லாபத் தொகையான இருபத்தேழாயிரம் ரூபிள்களையும் கொடுப்பதாகக் கூறினேன். வெகு பொருத்தமாக இருக்கவேண்டுமென்பதற்காக முழுத்தொகையையும் அப்படியே அப்பட்டமாகச் சொல்லவில்லை. அவள் இதனைக் கேட்டு மகிழ்ந்தாள். சில சந்தர்ப்பங்களில் பணம் — மனிதனுடைய மனதை சந்தோஷப்படுத்துகிறது.

“ வாஸ்தவத்திலேயே நீங்கள் ஒரு உற்ற நண்பர். உங்களுடைய பித்துக்குளி சகோதரன் என்ன செய்கிறார் ? ” என்றாள்.

என்னுடைய கேலியைப் புரிந்துகொள்ளாமல் கோலியா தவறுதலாக ஏதோ எண்ணிவிட்டானென்று

நான் அவளை நம்பும்படி செய்தேன். அவள் என் காதைப் பிடித்துத் திருகி "என்ன கோலியா?" என்றாள்.

"நான் ஒரு நாள் அவனிடம் சொன்னேன்" என்றேன்.

"என்ன சொன்னீர்கள்?" என்று காதை அழுத்தமாகக் கிள்ளினாள்.

"என்னை உனக்கு கல்யாணம் செய்துகொள்வதற்கு விருப்பம்" என்றேன்.

"பொய் சொல்கிறீர்கள்" என்று என்னை எட்டித் தள்ளிவிட்டு "அது தவறு. நீங்கள் அம்மாதிரி சொல்லியிருக்கமாட்டீர்கள்? வேறு எதையேனும் சொல்லியிருப்பீர்கள். இதுபோன்ற கேலிப்பேச்சு என் விஷயத்தில் அறவே வேண்டாம். அது ரொம்ப ஆபத்தாக முடியும்...... நான் காதை ஏதேனும் பலமாகக் கிள்ளிவிட்டேனா? என்ன!"

"இல்லை" என்று சொன்னேன். அப்பொழுது நான் எதையும் உணரவில்லை.

"நான் தவறுதலாகப் பலமாய்க் கிள்ளிவிட்டேன்" என்றாள்.

அதற்குப் பிறகு சிறிது நேரம் கழித்து மெதுவான குரலில் "நீங்கள் இருவரும் அபூர்வ சகோதரர்

சள். கர்ஞடகப் பேர்வழிகள். இக்காலத்திற்கேற்றவர்களல்ல. நாம் அனைவரும் சிநேகிதர்களாகவே இருப்போம். ஆனல் பரிகாசமே வேண்டாம். இல்லையானல்'' என்று விரலால் எச்சரித்தாள். "அவளுக்கு ஆடையில் விசேஷப் ப்ரீதியிருந்தது'' என்று கூறியபடியே பெருமூச்சுவிட்டார். வெளியில் தூறும் மழையை ஜன்னல் வழியாகக் கவனித்தார்.

அவள் ஆடையை இறுகக் கட்டியிருந்த சமயத்திலும், மாலை நேரக் காட்சியிலும், அவள் இயற்கையின் சோபிதமாகவே காட்சி அளித்தாள். அந்த இயற்கை அழகின் பிம்பத்தை உங்களால் பார்க்க முடியாதா? ஆம். அவளுடைய எழில் உருவத்தைப் பார்ப்பதே எனக்கு மனவேதனையைக் கொடுத்தது. ஏனெனில் நான் எப்படி அவளை இயற்கையின் எழில் பிம்பமாகப் பார்க்கிறேனே — அவ்விதமே மற்றவர்களும் பார்க்கக்கூடுமே என்ற பொறாமை உணர்ச்சியால் தான்.

நான் வீட்டிற்குப் போனதும், என் காதிலிருந்த காயத்தைப்பற்றிக் கோலியா கேள்வி கேட்க ஆரம்பித்தான். அதற்கு "நான் என் தாடியை சரிப்படுத்திக் கொள்ளும்போது கத்தரிக்கோல் என் காதை வெட்டி விட்டது'' என்றேன்.

நாடகக் காலம் ஆரம்பமானது. அந்த கர்ஞடக நகரத்தில் சிறந்த நாடகங்களுக்கு மதிப்பேது? பெண்களும், வாலிபர்களும் அவளுடைய ஆடை அழகையும்

நடையுடை ஒய்யாரத்தையும் பார்க்கவே வந்தார்கள். பொதுவாக கொட்டகை வசூலின்றி இருந்தது. இது லாரிஸாவை பெரிதும் வருத்த ஆரம்பித்தது.

லாரிஸா சாதாரணமாக உயர்ந்த முறையில் வாழ்ந்து வந்தாள். அவளுடைய வீட்டில் விருந்தும், மதுவும், கேளிக்கையும் தட்டின்றி நடந்தேறி வந்தன. அவளைச்சுற்றி சதா பல பித்தர்கள் சூழ்ந்துகொண்டிருந் தார்கள்.

ஒரு நாள் நானும், என் சகோதரனும் அவளைக் 'கவர்ந்துகொள்ளும் தனித்தனி திருடனைப்போல' கவனித்து வந்தோம். அப்பொழுது அவள் "சிங்கக் குட்டி மாதிரி அறைந்து விடுவேன்"என்றாள் அதற்கு என் சகோதரன் "வீட்டுப் பூனைக்குட்டியால் பிராண்டப் படுவதைவிட — சிங்கக் குட்டியால் அறைந்து கொல்லப் படுவது சிலாக்கியமானதே"என்றான்.

எங்கள் நகரத்துக்கு ஒரு வெள்ளைக்காரன் வந் தான். அவன் பெயர் வில்லியம் புரோக்டார். அவனுக்கு ஆங்கிலமும், பிரெஞ்சும் தெரியும். அவனை மாம்தகுலாப் லாரிஸாவுக்கு அறிமுகம் செய்துவைத்தான். அவன் மகா சூதாடி. அந்த வித்தையில் அவன் கைதேர்ந்த வன்.

ஒருநாள் லாரிஸா 50,000 ரூபிள்கள் கடன் கேட் டாள். அதற்கு உடனே கொடுப்பதாக வாக்களித் தேன். அவள் எதற்குக் கடன் கேட்டாள் என்று நான்

யூகித்தேன். அவளுடைய பொருளாதார நிலையை அவளைவிட நான் நன்கு உணர்ந்திருந்தேன்.

அன்று இரவு புரோக்டாரோடு அவள் தங்குவ தாகச் சொல்லியிருந்தால் அவளுக்காக நான் வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்திருப்பேன். ஆனால் நான் பின்னால் தற்கொலை செய்துகொண்டிருப்பேன். ஆம் நான் மட்டுமா?

நான் இன்னும் உயிரோடிருக்கிறேன். ஆம். புரோக்டாரைவிட இன்னும் எத்தனையோ கொடுமை கள் இருக்கின்றன.

அவன் தொலைந்தே போனான். அவள் கோபமும் துக்கமும் கொண்டவளானாள்.

இதையெல்லாம் நினைத்துப்பார்ப்பதற்கே எவ் வளவு துக்கமாக இருக்கிறது.

நான் கோலியாவை பீட்டர்ஸ்பர்க், சைபீரியா முதலான வெளியிடத்திற்குப் போகும்படி கேட்டுக் கொண்டேன். ஏனெனில் அவன் நாளொரு மேனியும் அவளால் உருகி, மெலிந்து, நைந்து வந்தானென்ப தாலேயே.

அதற்கு அவன் “நாம் இருவரும் சேர்ந்து செல் வோம்” என்று சொல்லி மழுப்பிவிட்டான்.

லாரிஸா லெண்ட் காலத்தை நகரிலேயே கழித் தாள். நாடகம் ஈஸ்டரில் ஆரம்பமானது. அந்த

இரண்டாவது வாரத்தில் தியேட்டர் சதுக்கத்தின் ஒரு மூலையில் கோலியா தற்கொலை செய்துகொண்டான். அவர்களுக்குள் ஏதோ நிகழ்ந்திருக்கும். ஆனால் எனக்கு எதுவும் தெரியாது. அவன் அதற்கு முதல் நாள்தான் அவளைப் பார்க்கப் போயிருந்தான். அவர்கள் இருவரும் பாவ்லாவின் கல்லறைக்குப் போயிருந்தார்கள். ஆம். கோலியா தன்னையே மார்பில் குறி வைத்து சுட்டுக்கொண்டான். அவர்கள் அவனைத் தூக்கிக் கொண்டு வந்து வீட்டில் போட்டார்கள். நான் காயமடைந்த மிருகத்தைப் போன்று கதறினேன். என்னைச் சுற்றிலுமே சகலமும் இருண்டுவிட்டது. ஆம். அவன் இறந்தான். அப்பொழுது லாரிஸா என் முன் இருந்தால் நான் அவளை என்ன செய்திருப்பேன் தெரியுமா? ஆம், அவளைப் பழிவாங்கியேயிருப்பேன்.

ஆனால் லாரிஸா அன்று அந்திவேளையில் பிராகினோடு வந்தாள். இப்பொழுதைப்போல அப்பொழுதும் இருட்டு. இதுமாதிரி அப்பொழுதும் மழை தூறிக் கொண்டிருந்தது. நான் அவளை 'ஹாலில்' சந்தித்தேன். கண்டதும் கதறினேன். அவள் மீது விழுந்தேன். அவள் என்னை மெதுவாகத் தள்ளிவிட்டு "எங்கே" எனக் கேட்டாள்.

அவள் அங்கமெல்லாம் மழையால் நனைந்திருந்தது. அவள் ஆடையிலிருந்த மழைத் தண்ணீர் 'ஹாலையே' ஈரமாக்கிவிட்டது. அவள் முகம் வெளுத்துக் காணப்பட்டது. கண்களோ ஜ்வலிப்போடு பிர

காசித்துக்கொண்டிருந்தன. அவள் உருவமே, பயங்கர கட்டுக் கதைகளில வரும் கோரரூபக் காட்சியளித்தது. அவள் கோவியாவருகில் முழந்தாளிட்டு உட்கார்ந்து, கிருஸ்துவின் சிலுவை அடையாளத்தை மானசீகமாக கையால்காட்டி "என்னை மன்னித்துவிடு. என்னருமைப் பையனே! என்னை மன்னித்துவிடு. நான் உனக்குச் சொல்லவில்லையா? ஆண்டவனே! என்னை மன்னிப்பாயாக" என்ருள்.

நானும் அவள் பக்கத்தில் முழந்தாளிட்டு உட்கார்ந்து, "எல்லாம் உன்ஞல் தானே. உன்னுடைய தவறே இத்தனைக்கும் காரணம்" என்று முணுமுணுத்தேன்.

அப்பொழுது அவள் மீது எனக்குக் கோபமே கிடையாது. வெறும் சூன்யமே என்னிடம் குடிகொண்டிருந்தது. நான் அவளை உற்று நோக்கிக் கொண்டிருந்தேன்.

"சும்மா இரு!" என்று அவள் பதில் சொன்ஞள்.

என்னையும் அவள் சவமென்று கருதி இயேசுவின் சிலுவைக் குறியை மானசீகமாகக் கையால்காட்டி எழுந்து ஜன்னலருகில் சென்ருள். எனக்கு உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரை நடுக்கமிருந்தது.

அவள் அப்பொழுது குடிப்பதற்கு ஏதேனும் வேண்டுமென்று கேட்டாள். நான் என்னுடைய அறைக்கு அழைத்துப்போனேன். அவள் கைகள் கத

கதப்பாக இருந்தது. அந்த எலும்பு மனிதன் பிராகி னும் உடன் வந்தான். அப்பொழுது ஒயினையும் — தேநீரையும் கொண்டுவரும்படி செய்தேன்.

அன்றிரவு முதல் நாங்கள் வாழ்ந்த வாழ்வு மறப் பதற்கியலாதது. அவள் போர்ட் ஒயின் குடித்தாள். கொஞ்சம் பிராந்தி சாப்பிட்டாள். தேநீரும் பருகினாள். அவள் கண்கள்தான் மிக்க ஜ்வலிப்போடு பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவள் கண்கள் — அதோ படத்தில் உள்ளது மாதிரி நம்மையும் உலகத்தையும் பரிகசிப் பது போன்று காட்சியளித்தன.

அவள் அப்பொழுது மிக்க வெறுப்போடும், வேதனையோடும் பேசலானாள். அவள் அதுமாதிரி பேசிக் கேட்டறியேன்.

"இந்த அருமைப் பையன் தன்னையே சுட்டுக் கொண்டான். அவன் விரும்பியதுபோல நான் நடந்து கொள்ளவில்லை. அதற்காக அவன் அவ்வாறு செய்து கொண்டான். நான் அதற்கென்ன செய்யமுடியும்? என்னை விரும்புகிறவர்களுக்கெல்லாம் நான் அப்படியே கீழ்ப்படிந்து விடுவதா? பிராகின் மூன்று வருஷமாய் தவம் கிடக்கிறான். நீயோ என்னை அடைய விரும்பு கிறாய். ஆண்டவன் எனக்கு அழகைக் கொடுத்திருக் கிறான். அதற்காக என் அழகை விரும்புகிறவர்களுக் கெல்லாம் அள்ளியள்ளி கொடுத்துவிடுவதா? அப்படித் தான் சாத்தியமா? எனக்கு பிடித்தமில்லாதவர்களால் வேறு எனக்குத் தொந்தரவு."

அவள் சொன்ன வார்த்தைகள் என்னை பயத்தாலும், வெட்கத்தாலும் நடுங்கவைத்தன. அவள் சொன்னவற்றில் உண்மை இருந்ததால் நான் பயந்தேன்.

அப்பொழுது பிராகின், "என்னருமை லாரிஸா, எனக்கு நாடகமே பிடிக்கவில்லை. அதில் எனக்கு நம்பிக்கையுமில்லை. ஒரு பணக்கார மாணவன் உனக்காக உயிர்நீத்துவிட்டான். ஆண்டவன் அவன் ஆத்மாவுக்கு சாந்தியளிக்கட்டும். உனக்கோ நல்ல விளம்பரம் தான்" என்றான்.

நான் அப்படியே பிராகினை கழுத்தைப்பிடித்து அறைய எத்தனித்தேன். ஆனால் லாரிஸா தடுத்து "அவன் ஒரு அயோக்கியன். அவனை விட்டுவிடு. அவன் திறமையுள்ளவன். நல்லவர்களுக்கு திறமை அபூர்வமே."

பிராகின் "ஆமாம், ஆமாம் நாடகத்தில்தான் நான் திறமையாக நடிக்கிறேன்." என்றான்.

லாரிஸா "எனக்கு வாழ்க்கையில் குறிக்கோள் ஒன்றுண்டு. நாடக அரங்கிலுள்ள ஆபாசங்கள் அனைத்தையும் ஒழித்துவிடவேண்டுமென்று விரும்புகிறேன். இன்றைய பெண் உலகத்தின் உயரிய பண்பை உலகமறியச் செய்யவேண்டுமென்று கருதுகிறேன். வெறும் காதல் மட்டுமல்ல, பிள்ளைப்பேறு பெறும் தாய்மை மட்டுமல்ல. இன்றைய பெண் புதிதாக ஒன்றை.

விரும்புகிறாள். அந்த புதுமை என்ன? அதைத்தான் அவள் அடைய வேண்டும். அது எனக்குத்தெரியாது" என்றாள்.

இதுபோன்ற வார்த்தைகளைப் பிற்காலத்தில் ஆயிரந்தடவை கேட்டிருப்பேன்.

"நாடக உலகில் என் பாடு மிகக் கஷ்டம். பொது மக்கள் எனக்கு குறுக்கே நிற்கிறார்கள் எனது வாழ்க்கைக்குத் தடங்கல் செய்கிறார்கள். எனது முற்போக்குக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். எனது கைஷியத்திற்கு இடையூறு செய்கிறார்கள். என்னை சதா தொந்திரவு செய்கிறார்கள். இறுதியில் இதுமாதிரி பிணங்களாகிறார்கள். கோலியா எவ்வளவோ கெட்டிக் காரன். அருமையானவன். ஆனால் எனக்கு—யாருமே எவருமே தேவையில்லை என்பதை நீங்கள் கூடவா உணரவில்லை?"

லாரிஸா இதுபோலப் பேசிக்கொண்டே போனாள். நெருப்பை அணைக்கத் தண்ணீரை ஊற்றுவதுமாதிரி அவள் குடித்துத் தீர்த்தாள். நானும் குடித்தேன். நான் குடித்து — தேம்பித் தேம்பி அழுதேன். லாரி ஸாவுக்காக அழுதேன். எனக்காக அழுதேன். கோலி யாவுக்காக அழுதேன். கடைசியாக அவளுக்காகவும் அழுதழுது அவளிடம் முழந்தாளிட்டு உயிருள்ளளவும் அவளிடம் நன்றியுள்ள நாய்போல் நடப்பதாக சபதம் செய்தேன்.

"ஏ — கருணைக் கடவுளே......"

ஸ்டவ்வுக்குப் பக்கத்தில் ஏதோ சப்தம் கேட்டது. ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்திப் பார்த்து "அங்கே எலி ஓடுகிறது. இதுமாதிரி சந்தர்ப்பங்களில் அப்படித்தான் எலி ஓடச்செய்யும்" என்ருர்.

அவர் ஜன்னலை உற்று நோக்கினர். மழைத்துளி விழுவதைக் கவனித்தேன். அப்பொழுது தியேட்டரிலிருந்து திரும்பிவந்த எவரோ ஒருவர் ஜன்னலருகிலிருந்து "இல்லை அது என்ருல் முடியாது" என்ருர்.

அன்றிரவு நான் மீளாத காதலோடு லாரிஸாவைக் காதலித்தேன்.

அவள் கோடையில் 'ஓகா'வில் ஒரு பங்களா பிடித்திருந்தாள். நான் அடிக்கடி போய்த் தங்கிவருவதுண்டு. அவள் வாழ்க்கையே மகிழ்ச்சியும் குதூகலமுமாகும்.

நான் "அவர்கள் எல்லாம் உனக்குக் குறுக்கே நிற்காதவர்களா?" என்றேன்.

'லாரிஸா — "ஆம். அவர்களெல்லாம் என் வழிக்கு நிற்பவர்கள். நான் வாழ்வதற்கு உறுதுணையாக இருப்பவர் நீங்கள் ஒருவரே" என்ருள்.

இதுபோன்ற தாராள வார்த்தைகளை நான் கேட்டிருக்கிறேன். அவள் உண்மையிலேயே பெருந்தன்மையுள்ளவள். அவள் என்னை மற்றவர்களிடத்தில் அறிமுகம் செய்துவைக்கும்பொழுது

“எந்த பிரதிப் பிரயோஜனமும் கருதாத எனது நண்பர்” என்று சொல்வாள்.

பொதுவாக ஊரார் அனைவருமே அவளை என் எஜமானி என்று கருதினார்கள்.

லாரிஸாவோடிருந்த ஹாஸ்ய நடிகையான சோனியா என்மீது அன்பு பாராட்டி காதல்கொள்ளலானாள். அந்தக் கதை ருசிகரமானது.

ஒரு நாள், நான் அந்திப்பொழுதில் அஸ்தமிக்கும் ஆதவனின் எழிலைக்கண்டு ஆழ்ந்திருந்தேன். அன்று கோடை காலமானாலும் — மாலைக்காற்று ஜில்லென்றிருந்தது.

சோனியா சிகரெட்டைக் குடித்துக்கொண்டு “பீட்டர் — தங்களுக்கு வாழ்க்கை கஷ்டமாக இல்லையா?” என்றாள்.

“இல்லை — அப்படி கஷ்டமில்லை” என்றேன்.

நான் உண்மையைச் சொல்லி லாரிஸாவைக் காட்டிக்கொடுக்க விரும்பவில்லை.

“பீட்டர் நீங்கள் ஒரு பொய்யர். தங்களை நான் மூன்று வருஷங்களாகக் கவனித்து வருகிறேன். நான் தங்களைக் காதலிக்கிறேன். ஒரு பெண், இதுமாதிரி விஷயத்தை முதலில் ஒப்புக்கொள்வது ஒழுங்கீனமாக இருக்கலாம். நான் தங்களை மனதாரக் காதலிக்கிறேன்.

தங்களுச்கு காதலின் வேகமும், துன்பமும் தெரியாத தல்ல. என்னை நீங்கள் ஆதரித்தேயாகவேண்டும்"

நான் இதில் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டே னென்று சொல்வதற்கில்லை. எனக்கு எதிரே புதிய வெள்ளத்தோடு ஆறு பிரவாகமாக ஓடிக்கொண்டிருந் தது. என்னுடைய வாழ்க்கையைப்போல் ஆற்றின் பிரவாகம் குழம்பியிருந்தது. நான் ஆற்றில் குதித்துத் தானே ஆகவேண்டும்.

சோனியாவின் கண்களில் நீர்மல்கியிருந்தது. அதோடு சமாளித்துக்கொண்டு "நான் தங்களைக் காதலிப்பது பிடித்தமில்லைபோலும்" என்று சொல்லி தன் கரங்களை நீட்டினாள்.

நான் அவளை விலக்கி "எட்டிப்போ" என்றேன். அவள் "நான் விலகவா வேண்டும்? இவ்வுலகில் யாராவது பாசாங்கு இல்லாது மனதார உங்களை காதலிக்கிறார்களென்றால் அது நான் தான். லாரிஸாவி னுடைய ஆத்மாவை மூளை என்கிற சிறிய வஸ்து அரித்துத் தின்றுவிட்டதென்பது தாங்கள் அறியாததா?" என்றாள்.

அவ்வளவுதான். அவள் லாரிஸாவைப்பற்றிச் சொன்னதுமே எனக்குக் கோபம் ஏற்பட்டுவிட்டது. அவள் பொறாமையாலும், குரோதத்தாலும் எனக்குப் ப்ரீதியான அவளது 'ஆத்மா'வை பழிக்கிறாளென்றால் எனக்கு கோபம் வராமல் என்ன செய்யும்?

நான் மெதுவாக அவளைவிட்டு நகர்ந்துவிட்டேன். அவள் பெஞ்சிலேயே உட்கார்ந்தவாறு சிகரெட்டைப் பிடித்து புகைவிட்டுக்கொண்டிருந்தாள்.

நான் அவளை விட்டுப் பிரிந்ததும் எனக்கு பெரும் துக்கமேற்பட்டது. என்னுடைய வாழ்க்கையில் முதல் தடவையாக கண்ணீர் விட்டுக் கலங்கினேன். நான் ஒரு எறும்புப் புற்றின்மீது உட்கார்ந்திருந்தேன். எறும்புகள் என்னைக் கடித்ததை முதலில் உணரவில்லை. வெகு நேரத்திற்குப்பிறகுதான் நான் துணிகளை உதறி எறிந்து, குளித்துத் தீரவேண்டியிருந்தது. பின் நான் அன்றிரவை அதே ஆற்றங்கரையில் கழித்தேன்.

மறுநாள் காலைச்சாப்பாட்டுக்குப்பின், லாரிஸா என்னைக் கூப்பிட்டனுப்பி "சோனியா தங்களிடத்தில் ஒரு நாடகத்தையே நடித்துக்காட்டிவிட்டாள். தங்களை அவள் மோசமாகத்தான் நடத்தியிருக்கிறாள். எனினும் அவளுடைய விருப்பத்தை நீங்கள் மறுத்தது அற்பத் தனம். இருந்தாலும் அது தங்கள் சொந்த விஷயம். ஆனால் என்னைப்பற்றி நீங்கள் ஏதேனும் குறைசொல்லி யிருந்தால் அது மிகமிக அற்பத்தனம்... இருக்கட்டும் நீங்கள் ஏதேனும் என்னைப்பற்றிக் குறை சொன்ன துண்டா?" என்றாள்.

"அப்படி ஒன்றுமில்லையே"என்றேன்.

அப்பொழுது அவள் பார்த்த பார்வை என் இருதயத்தை ஊடுருவியது.

“நீங்கள் எதையும் என்னிடமிருந்து எதிர்பார்க்காதீர்கள். நாம் சேர்ந்து வாழ்வோமென்று கனவு காணாதீர்கள். பொதுவாக நீங்கள் சோனியாவை மறுதளித்தது சரிதான். அவளிடம் நீங்கள் அவசரப் பட்டிருந்தால் அவள் உங்களை அரித்துத்தின்று விடுவாள்.... நான்தான் என்ன — எவ்வளவு குரூரமானவள் தெரியுமா?” என்றாள்.

அவள் இவ்வாறு சொன்ன அன்று வெண்ணிற ஆடை உடுத்தியிருந்தாள். அவளுடைய அங்கமெல்லாம் அன்று ஒரே சோபிதமாகப் பிரகாசித்தது. நான் துன்பப்படும் அளவுக்கு ஜாஜ்வல்யமாக இருந்தது. அவள் அணிந்திருந்த ஸ்டாகின்ஸ், செருப்புகள்கூட வெள்ளை நிறமே. அவள் கருங்கூந்தலும், மருண்ட பார்வையும் என்னை எப்படியோ பரவசப் படுத்தியது. அவள் நாற்காலியில் சாய்ந்திருந்தாள். அவள் கால்களிலிருந்த செருப்பு நழுவியிருந்தது. அவள் குதிகால் ஆப்பிள் பழம் போல இருந்தது. அவள் இருந்த அறை மலர்களால் பரிமளித்துக்கொண்டிருந்தது. ஆதவனின் பொன் நிறக் கிரணங்கள் வேறு அவ்வறையில் பாய்ந்து, அவளின் பேரழகுக்கு அழகு செய்தன.

ஒரு ஸ்திரியினுடைய அழகில் எவ்வளவு வசீகர சக்தி இருக்கிறது தெரியுமா? நான் அப்பொழுது “கண்ணாடியைக்கொண்டு சூரியனுடைய ஒரு கிரணத்தைப் பிடிப்பதுபோல” என்று கோலியா சொன்ன வார்த்தைகளை நினைத்துக்கொண்டேன்.

கொஞ்ச நேர மௌனத்திற்குப்பின் அவள் யோசித்துப் பேசலானாள்.

"பீட்டர்! சோபியா எவ்வளவு திறமை வாய்ந்தவள் என்பதை நீங்கள் உணரமாட்டீர்கள். அவளுடைய திறமைக்கேற்ற நாடகங்கள் இல்லை. அவள் திறமையில் எனக்குப் பாதியிருந்தால்கூட...... அவள் ஒரு சோப்பு வியாபாரியின் மனைவியாக இருக்க விரும்புகிறாள்."

"அந்த சோப்புக் கம்பெனியிருப்பதால்தான் தங்களுக்கு என்ன பிரயோஜனம்? அதை ஏன் நீங்கள் தொலைத்து தலைமுழுகக்கூடாது? அதுவேறு ஏன் உங்களுக்கு?" என்றாள்.

நான் அதற்கு அப்படியே 'சரி' என்று சொன்னேன். எனக்கு சோப்புக் கம்பெனி அவசியமில்லை என்பது வாஸ்தவமே. நான் என் வாழ்நாள் முழுதும் தனி மனிதனாகவே வாழப்போகிறேன் என்பதையும் உணர்ந்தேன்.

நான் வீடு வந்துசேர்ந்ததும் சோப் கம்பெனியை விற்றுவிடும்படி மானேஜரிடம் கூறினேன். மானேஜர் மார்ட்டின் முதலில் ஆச்சரியப்பட்டார். பின் கோபப்பட்டார். கடைசியாக, மற்றவர்களுக்குக் கொடுப்பதை விடத் தானே விலைக்கு எடுத்துக்கொள்வதாகக் கூறி விட்டார். ஆகவே சோப்புக் கம்பெனி ஒருவாறு தீர்ந்தது.

பிறகு நான் லாரிஸா நடித்துக்கொண்டிருந்த ரியாஜன் நகரம் போய்ச் சேர்ந்தேன். அங்கு நான் ஒரு ஹோட்டலில் தங்கிக் கொண்டேன் அங்கு ஒரு புது வாழ்வு நடத்தத்தொடங்கினேன். நான் அங்கு பனி ரெண்டு நீண்ட வருஷங்களைக் கழித்திருக்கிறேன். ஹோட்டல் வாழ்க்கையிலேயே சோம்பேறித்தனமாக, அழுக்கடைந்த இருப்பிடத்திலேயே இருந்துகொண்டு, சதா அன்னியர்களையே பார்த்துப் பார்த்து கழித்த காலம் கண்ராவியானதுதான். நான் மில்லில் அகப் பட்ட அரிசி மணலோடு அரைக்கப்படுவதுபோல காலத்தால் கடத்தப்பட்டேன். எதற்காக வாழ்கிறோம் என்ற லக்ஷியமின்றி, ரஷ்யாவில் அநேகர் வாழ்வதை உணர்ந்தேன். இப்பேர்ப்பட்டவர்கள் பெரும்பாலும் தியேட்டரைச் சுற்றியே காலம் கழிக்கிறார்கள். தியேட்டர்தான் சகல மோசடிக்கும் இருப்பிடம்.

லாரிஸா உண்மையாகவே நடித்தாள். அவள் நாடகமேடை மூலம் உண்மையை எடுத்துச் சொல்லிய விஷயங்களை பொதுமக்கள் நம்பியதில்லை. ஆனால் நடிப்பில் பரவசப்பட்டவர்களும், பரிதாபப்பட்டு மனங் கலங்கியவர்களும் உண்டு.

அவள் நடித்த இடங்களிலெல்லாம் அவளைச்சுற்றி மோப்பம் பிடிப்பவர்கள் பலர் சூழ ஆரம்பித்தார்கள். மின்ஸ்கில் அம்மாகாண கவர்னரே — அவளை சதா மோப்பம் பிடித்து வந்தார். மற்ற வியாபார மன்னர்களைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? இந்த விஷயங்களெல்லாம் பத்திரிகை உலகில் அம்பல மாகியது.

கடைக்காரர் எழுந்து 'ஸ்டவ்' இருந்த இடத்திற்குச் சென்று "அக்காலத்தில் அவளுக்குப் பிடித்தமாக யிருந்தது 'செயின்ட் எஸ்டலி' ஒயின்தான் நான் அதை அப்பொழுது பிரான்சிலிருந்து வரவழைத்தேன்" என்று சொல்லி அந்தாக ஒயினில் ஒரு பாட்டில் உடைத்து மற்ளுென்றில் கலந்து குடித்துத் தீர்த்தார். பின் அவர் வாயைத் துடைத்துக்கொண்டு சாவதானமாக, மெதுவாக தொடர்ந்து பேசலானர்.

அவள் காதல் வாழ்வே விசித்திரமானது. அவளுக்காக அவதிப்பட்டோர் எண்ணற்ருேர். தாம்பாவில் அவள் பொருட்டு ஒரு சிறை இன்ஸ்பெக்டருக்கும் மேலதிகாரி ஒருவருக்கும் தகாராறு முற்றி கொலைவரையில் முடிந்தது. இதனல் அவள் நாடகத்தைப் பாதியோடு நிறுத்திக்கொண்டு ஒரு பண்ணையாரோடு புறப்பட்டுவிட்டாள். அந்தப் பண்ணையார் ஒரு விசித்திர மனிதர். பழங்கால கல்வெட்டு ஆராய்ச்சிக்காரர் அது மாதிரி விசித்திர மனிதரோடு இருபத்தாறு நாள் காலங்கழித்தாள். அவளுடைய அக்கால வாழ்வைக் குறித்த விஷயங்களனைத்தையும் நான் சரியாக குறித்து வைத்துக்கொண்டிருந்தேன். நான் எதற்காக அப்படிச் செய்தேன் என்று தெரியாது. ஒருக்கால் நான் ஒரு நாள் அவளிடம் இவைகளைப்பற்றியெல்லாம் ஞாபக மூட்டலாமென நினைத்திருப்பேன். எப்படியிருந்தாலும் நானும் ஒரு மனிதன் தானே. ஏதோ பழிவாங்க வேண்டுமென்ற எண்ணமும் இருந்தது.

சில சந்தர்ப்பங்களில் அவள், சிலசமயம் காதல் கனிந்த பார்வையோடு பார்ப்பதைக்கண்டு வேதனையடைந்தேன். நான் தவறுதலாக நினைத்தது கிடையாது. இதனால் வெறுப்படைந்து நான் அவளைப் பார்க்காமலேயிருந்தேன். இராக்காலங்களில் ஏதேதோ கொடிய எண்ணங்களை எண்ணியதுண்டு. நாங்கள் சென்ற நகரங்களிலெல்லாம் ஜனங்கள் என்னைக்கண்டு ஏளனமாக நினைத்து எள்ளி நகையாடி வந்தார்கள்.

" அருமை பீட்டரே முட்டாளாகிவிடாதீர்கள் " என்பாள்.

ஒரு நாள் என்னையும் மீறி நான் " ஒரு மனிதன் உன்னால் நாயாக மாறிவிட்டானே என்றுகூட நினைத்துப் பார்த்து வெட்கப்படுவதற்கில்லையா?" என்றேன்.

அவள் இதனைக்கேட்டு பெருமூச்சுவிட்டு "நிச்சயமாக நீங்கள் ஒரு மனிதர் "என்றாள்.

அவளுடைய பெருமூச்சு எனக்கு ஆச்சரியத்தை ஊட்டியது. அதனால் நான் மீண்டும் நம்பிக்கையைப் பெற்றேன்.

ஒரு சமயம் அவள், ஒரு கதாசிரியன்மீது காதல் கொண்டாள். அவன் கொஞ்சம் கர்வி, முரடனுங்கூட. அவன் அவளை இரவு சாப்பாட்டுக்குப்பின் பாய்ந்து கவ்வ எத்தனித்திருந்தான். அவள் அதனை உணர்ந்து " பீட்டர் இவர் தன் மனைவியிடம் போகவேண்டியவர். தயவு செய்து இவரை வீட்டிற்கு அனுப்பிவிடுங்கள் " என்றாள்.

நான் அவரை மிக்க சிரமப்பட்டு வெளியேற்ற வேண்டியிருந்தது. ஏனெனில் அவன் கண்யமற்றவன். அதோடு 'பட்டா'ப் பேர்வழி.

நான் லாரிஸாவோடு நாடோடி வாழ்க்கை நடத்தி வந்தேன். அவமானம், கேவலம், பரிகசிப்பு ஆகிய எதையும் நான் பொருட்படுத்தவில்லை.

ஆறுவது வருஷத்தில் நாங்கள் டோம்ஸ்கில் இருக்கும்பொழுது மீண்டும் ஒரு புதுவாழ்வு துவங்கியது. அங்கிருந்த சைபீரிய மக்கள் காட்டுத்தனமும், முரட்டுத்தனமும் மிகுந்தவர்கள்.

இங்கு அவள் வெகு ஜோராக நடித்தாள். வாலிப உலகம் பெரிதும் விரும்பியது. இந்த சைபீரியர்கள் கரடிகள் மாதிரி அவளைச்சுற்றி சதா வளைத்துக்கொண்டு, கண்ணடிப்பதும், சீட்டி அடிப்பதுமாக இருந்தார்கள். போதாக்குறைக்கு அவளைச்சுற்றிச் சதா குடியர்களின் புகை மண்டலம் படர்ந்திருந்தது.

இங்கு இரண்டு பெரிய பணக்காரர்கள் அவளை வருஷப் பிறப்பிற்குள் யார்தான் முதலில் வசப்படுத்துவது என்பதற்காக பந்தயம் கட்டியிருந்தார்கள். லாரிஸா இந்நகரத்தில், வேறு எங்குமில்லாத அதிக அழகுள்ளவளாக இருந்தாள். நான் இரு பணக்காரர்களையும் ஹோட்டலின் என் தனி அறைக்கு விருந்துண்ண அழைத்தேன். என்னிடம் 'ரிவால்வர்' இருந்தது. அது சைபீரியா அல்லவா? ஆம். அதோடு நான் இரவு நேரங்களில் வெகு நேரம் கழித்துத் தனியாக வீடு திரும்புகிறவன்.

நான் அந்த பந்தயக்காரர்களிடம் "அவளுக்காக பந்தயங்கட்டி ஏமாந்துவிடவேண்டா"மென எச்சரித்ததோடு — மீறி அவளை ஏதேனும்செய்ய எத்தனித்தால் அவர்களுடைய மண்டையை சுக்குநூறுக்கி விடுவதாக பயமுறுத்தினேன். அவர்கள் முதலில் என்னைத் தாக்கி விடலாமென்று கருதினார்கள். ஆனால் என் ரிவால்வரைப் பார்த்ததும் அவர்கள் என் விஷயத்தில் ஒடுங்கி விட்டார்கள். ஆனால் அவர்கள் நாடகக் கொட்டகையில் கூச்சலும், குழப்பமும் செய்யத் துணியாமலில்லை.

நாடகத்தை எவரும் பார்க்கக்கூடாத அளவுக்கு காலித்தனங்கள் நிகழ ஆரம்பித்தன. கொட்டகைமீது கல்வீசுவது, நடிகர்கள் தோன்றியதும் சீட்டியடிப்பது, கூச்சல் போடுவது, இடை நேரங்களில் 'ஒன்ஸ்மோர்' போடுவது ஆகிய விஷயங்கள் சர்வ சாதாரணம். இந்த நிலைமையைச் சமாளிக்க பிரதம போலீஸ் அதிகாரி வந்தார். அவரோ பெருங்குடியர், தடியருங்கூட. அவர் வந்த அன்று என்ன சொன்னார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அன்று இரவே 'பேர்ம்' நகரம் போய்விடவேண்டுமென்று லாரிஸா முடிவு கூறினாள்.

அன்றிரவு நாங்கள் ரயிலில் போய்க்கொண்டிருந்த பொழுது லாரிஸா, "பீட்டர் நீங்கள் எனக்காக வருத்தப் படுகிறீர்களா என்ன? நீங்களே வருத்தப்படுவதானால் நான் என்ன செய்யமுடியும்! என்னிடம் வாஸ்தவத்தில் திறமையில்லையா? ஒரு கூட்டத்தை சமாளிக்கக்கூடிய ஆற்றல் கூடவா எனக்கில்லை. உண்மையைச் சொல்லுங்கள்......" என்றாள்.

எனக்கு உண்மை தெரியாமலா இருந்தது? ஆனால் அவளிடம் உண்மையை எடுத்துச்சொல்ல தைரிய மில்லை. இருந்தாலும் அவளுக்கு வேண்டிய அளவுக்கு சமாதானம் சொல்லிவந்தேன். ஆனால் அவள் திரும்பத் திரும்ப தன்னுடைய சந்தோஷமில்லாத வாழ்க்கைக் குக் காரணம் என்னவென்று கேட்டாள்.

ரயில் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அதோடு நாடு நகரங்களும் மறைந்து சென்றன.

அவள் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்து "நான் அவ்வளவுதான். இனி எனக்கு ஜீவனில்லை. என் அந்திய காலம் நெருங்கி வருகிறது" என்றாள்.

இவ்வளவு வேதனையோடு அவள் பேசியது என்னை உருக்கிவிட்டது. அவள் வேதனைக்கு காரணம் இல்லாமலில்லை. அவள் பத்து வருஷங்களுக்குமேல் நாடக உலகில் இருந்து வருகிறாள். ஆனால் எந்தப் பெரிய பட்டணங்களிலும் இவள் அதுவரை நடிப் பதற்கு அழைக்கப்படவில்லை. நாங்கள் பல இடங்களி லும் அலைந்து திரிந்துவிட்டோம். அவள் எவ்வளவோ தாராளமாக பணத்தை வாரி வாரி இறைத்துவிட்டாள். இறுதியாக அவளிடம் அழகும், இளமையும் என்றுமே சாஸ்வதம்போல மங்காதிருந்தது......

பீட்டர் சற்று மூச்சு வாங்குபவர்போலக் காணப் பட்டார். அவர் சிறிது நேரம், தன் கவனத்தை மாற்றி மீண்டும் பேசலானார்.

நாங்கள் 'பேர்ம்' நகரம் வந்து சேர்ந்தோம் அது வெண்மேகம் சூழ்ந்த நகரமாக இருந்தது. அங்கு சதா பனி. எங்கு பார்த்தாலும் பனிக்கட்டிகள். நாங்கள் ஏதோ பூமியில் வசிப்பதாகவே தோன்றவில்லை.

அங்கு போய்ச்சேர்ந்த மூன்றும் நாள் மாலை என்னை தேநீர் சாப்பிட லாரிஸா அழைத்திருந்தாள், அவள் திராக்ஷை ரசக்கலரில் தங்க வேலைப்பாடோடு கூடிய உடை உடுத்தி சோபாவில் சாய்ந்து உட்கார்ந் திருந்தாள். அவள் கருங்கூந்தல் அவள்மீது புரண்டு தவழ்ந்து கிடந்தது. அவள் ஏகாங்கியாக களைத்துக் காணப்பட்டாள். அவளிடம் பெண்மை பரிபூர்ணமாகக் குடிகொண்டிருந்தது. அவளுக்கு அப்பொழுது வயது நாற்பது. அவள் மெலிந்திருந்தாள். அவள் அமைதி யுடன் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

"என் பிரிய நண்பரே! தங்களுடைய உதவி யில்லாவிடில் என் கதி என்னவாகியிருக்கும்? நீங்கள் என்மீது எந்தவித பிரதிப் பிரயோஜனமும் கருதாமல் அன்பு செலுத்தியும் நான் தங்கள் வாழ்வையே கெடுத்துவிட்டேன். அது உண்மையல்லவா?" என்று என்னைக் கேட்டாள்.

அவள் இதுமாதிரி என்னிடம் பேசியதில்லை. அம் மாதிரிப் பேச்சைக் கேட்டதும் என் சுய உணர்வை இழந்தேன். நான் அவளருகில் மண்டியிட்டு உட்கார்ந் தேன். அவள் முழங்காலை முத்தமிட்டேன் "ஆம் - என் வாழ்வு அழிந்தேவிட்டது" என்றேன்.

அவள் என் தலைமயிரைக்கோதியபடியே "அநியாய மாக இப்படி நேர்ந்ததே" என்றாள். அவள் கண்ணீர் கதகதப்போடு என் கழுத்தில் விழுந்தது. அவ்வளவு தான். நான் முதல்தடவையாக அவளை என்னுடைய வளாக்கிக்கொண்டேன். அதுவே என் துன்பத்தையும், வேதனையையும் பெருக்கலாயிற்று.

எனக்கு உணர்வுவந்து கவனித்தபொழுது அவள் பாதி உடுத்தியும், உடுத்தாமலும் உட்கார்ந்திருந்தாள். அவள் முகம் அமைதியாக இருந்தது.

"நாம் இப்பொழுது சதிபதிகளானோம். சந்தோஷந் தானே? நாம் இப்பொழுது தேநீர் அருந்துவோம். சாம்பெயின் ஒயினும் கொண்டுவரச் சொல்லுகிறேன்" என்றாள் தன் இனிமையான குரலில்.

எனக்கு அப்பொழுது ஏதோ என்னை கட்டி யணைப்பது மாதிரி தோன்றியது. நான் தரையில் அவள் காலடியில் உட்கார்ந்தேன்.

"நீ என்னை காதலிக்கவில்லை. காதலன் என்கிற முறையில் நான் உனக்குச் சொல்லுவதொன்றுமில்லை" என்றேன்.

அவள் சட்டென்று எழுந்து "என்னருமை நேசரே! என்னால் முடியாததற்கு நான் என்ன செய்யக் கூடும்? என்னிடத்திலோ எதுவும் கிடையாது. நீங்கள் என்னை நன்றாக புரிந்து நடந்து கொள்ளுங்கள்" என்றாள்.

நான் அவளை நன்கு உணர்ந்தேன். அவள் மீது கொண்டிருந்த அன்புக்குக் காரணம் அவளை நான் நன்குஉணர்ந்திருந்தது தான்.

நான் கம்பளத்திலே உட்கார்ந்து அவளுடைய அரை நிர்வாணத்தைப் பார்த்தேன். உடல் ஜில்லிட்டு விட்டது. அப்பொழுது "முட்டாள்களுடைய இன்பத்திற்காக என்னுடைய இதயத்தையே சிதறடித்துக் கொண்டேனே" என்றாள்.

என்னிடம் போதிய செல்வமிருந்தது. நாடகத் தொழிலை விட்டுவிட்டு அவளை என்னோடு வந்துவிடும்படி கெஞ்சி வேண்டினேன்.

அவள் "முடியாது" என்று கண்டிப்பாக மறுத்து "என்னிடம் திறமையில்லையென்று என்னால் நம்ப முடியவில்லை. நீங்கள் தயவுசெய்து திரும்பிப் போய் விடுங்கள். தங்களுக்கு அளவுகடந்த கஷ்ட நஷ்டம், யாரும் பரிதாபத்திற்காக 'காதல்' புரியமாட்டார்கள். அப்படிச் செய்வதும் சரியல்ல. நீங்கள் ஒரு ஆபூர்வ நண்பர். பிரியமானவர். உங்கள் வாழ்வு என்னால் அழிந்துபோகும்" என்றாள்.

கண்ணியமாகவும், அன்பாகவும் அவள் இது மாதிரி பேசிக்கொண்டே போனாள். அவள் வற்புறுத்தலுக்காக முன்போல் என் பக்கத்தில் உட்கார்ந்தாள். அப்பொழுது "நீ இல்லாமல் வாழ்வேது? நான் எப்படி உன்னை விட்டுப் பிரிந்து செல்வேன். உன்

இஷ்டப்படி நடந்துகொள். நான் எப்பொழுதும் உன் பக்கத்திலேயே இருந்து விடுகிறேன்" என்றேன்.

அவளைக் கட்டியணைத்து நான் முத்தமிடத்தக்கவாறு அவள் என்னை ஆலிங்கனம் செய்தாள். ஆனால் நான் அவள் விரும்பாதவரை முத்தமிடுவதில்லை என்றேன்.

ஆ! கடவுளே அவள் எவ்வாறு அழுதாள்.

பீட்டருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியது. அவர் கண்களைத் துடைத்துக்கொள்ளாமலே பேசிக்கொண்டே போனார்.

இதற்குப் பிறகு அவளோடு ஏழாண்டுகள் கடந்தன. இவ்வேழாண்டுகளில் நான் பட்டுள்ள அவஸ்தைகள் சொல்லக்கூடியதல்ல. அவளும் அப்படியேதான்.

அவளுடைய நாடகத் தொழிலோ வரவர மோசமாகப்போய்விட்டது. அவளது சகநடிகர்கள் அவள் மீது பொறாமையால் விரோதமும், குரோதமும்கொண்டு தொழிலுக்கே ஊறுதேட ஆரம்பித்தார்கள். இந்தக் காலத்தில், கோலியா வயதிற்குச் சமதையாக இருந்த டாக்டர், லாரிஸாவோடு சினேகமானான். இவன் ஆரம்பத்தில் அவள் உடல்நிலைக்கு சிகிச்சை செய்யும் முறையில் சிநேகமாக நெருங்கியவன் — அவளுடைய காதலுக்கே ஆளாகிவிட்டான். அவளுடைய கூடா

நட்பு எனக்கு வேதனையைக் கொடுத்தது. ஆனால் என்றைக்காவது ஒருநாள் அவளை என் வசப்படுத்தி விடலாமென்ற என் நம்பிக்கையை இழக்காது டாக்டரோடு சிநேகமாக இருந்துவிட்டேன். இது டாக்டருக்குத் தெரிந்த விஷயமே.

ஒரு நாள் "நான் உனது ஒப்பினைக்குடித்து உனது மனைவியை முத்தமிடுகிறேன் என்றார் டாக்டர். அதற்கு "இல்லை. இல்லை. அவள் எனக்குச் சொந்தமில்லை. அவள் — அவள் துன்பத்திற்குரியவள்" என்றேன். லாரிஸா டாக்டரோடு சந்தோஷமாகக் காலங்கழித்தாள். ஆனால் அடிக்கடி ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்களால் அவள் மன சஞ்சலமடைந்தாள். ஒருசமயம் "குற்றவாளிகளைப் பற்றியும், ஸ்திரிகளைப் பற்றியும் நாம் நினைக்கும்பொழுதே அவர்களுக்குப் புரிந்துவிடுகிறது" என்றார் டாக்டர். இதன்பேரில் மூன்று நாள் கடும் விவாதம் நடந்தது. அவள் இதனால், இறுதியாக படுக்கைக்கு ஆளானாள்.

டாக்டருக்கு க்ஷயநோயிருந்தது. அதனால் அவர் சுவிட்சர்லாந்துக்குப் போய்விட்டார்.

அதற்குப்பின் லாரிஸாவுக்குப் பைத்திய வாழ்வு ஆரம்பித்தது.

பொதுவாக நாற்பது வயதிற்குப்பின், சில பெண்கள் தன் இச்சைக்குத் துணிந்து நடப்பதைப் பார்த்திருக்கிறேன். இந்த ரகத்தைச் சேர்ந்தவள்

லாரிஸா. ஒரே மாதத்தில், ஒரே சமயத்தில் அவளுக்கு இரு காதலர்கள். ஒருவன் நாடகக் கோமாளி. மற்றொருவன் தன்னை கவிஞன் என்று சொல்லிக் கொண்ட மாணவன்.

இக்காலமெல்லாம் நான் சொல்லமுடியாத மனோ வேதனையை அடைந்திருக்கிறேன். எனது வாழ்வின் மிக மோசமான காலமும் அதுவேதான். நான் அவளை, அவள் இஷ்டத்திற்கு மாலை நேரங்களில் விட்டுவிட்டு விடிய விடிய இரவு முழுதும் நகரங்களைச் சுற்றித் திரிந்தேன் இராக் காலங்களில் தன்னந் தனியே, வேதனையோடு கூடிய மனதோடு சுற்றித் திரிவதென்றால் அதன் கொடுமையை என்னவென்று சொல்வது? எத்தனை எத்தனையோ இரவுகளில் பிறர் வீட்டின் ஜன்னல்களை எட்டிப் பார்த்து அவர்கள் புரியும் காதல் வாழ்வைக்கண்டு என்னையும் ஒப்பிட்டு மனம் வெடித்துப்போனேன்! நிலா வெளிச்சத்தில் ஒரு தனி மனிதன் – தன் நிழலைமட்டும் இழுத்துக் கொண்டு பூமியில் நடப்பது என்பது எவ்வளவு வேதனையான காரியம். அப்பப்பா......

லாரிஸா, மட்டரகமான காதல் நாடகங்களை நடிக்கலானாள். அவள் நாடக மேடைகளில் தன் அழகிய மார்பகங்களைத் திறந்து காட்டிக்கொண்டு அரைநிர்வாணமாகத் தோன்றலானாள். நான் இதனால் பித்தம் பிடித்தவனானேன். வெளிநாட்டுக்குச் சென்றுவிடுவோம் என்று அவளை, மன்றாடிக் கேட்டுப்பார்த்தேன். அவள்

கேவலமாக நடிக்கக்கூடாதென அவளுக்கே யோசனை கூறுமாறு சுவிட்சர்லாந்திலிருந்த டாக்டருக்குக் கடிதம் எழுதிப் பார்த்தேன்.

அவர் கடிதத்தில் " அழியாத்தன்மை என்கிற உணர்வானது மூளையின் வியாதியாகும் என்றார் டால்ஸ்டாய். காதல் என்பது எண்ணத்தின் வியாதி. குழிமுயல்களும் — கினியா பன்றிகளும் சர்வசாதாரண மாகக் காதலை நடத்துகின்றன " என்ற விஷயத்தை எனக்கு எழுதியிருந்தார்.

எப்படியோ, அவர் முட்டாள்தனமாக எழுதி யிருந்தார். சில சந்தர்ப்பங்களில் படித்த மனிதர்கள் இப்படித்தான் திருப்தியற்ற முறையில் நடந்துகொள் வதை நான் கவனித்திருக்கிறேன். படித்தவர்கள் எத்தனையோவித எண்ணங்களைத்திரட்டி வைத்திருக் கின்றனர். பணக்காரர்கள் தங்கள் பணப் பெருமையை பீத்திக்கொள்வதற்கு வைத்திருப்பது மாதிரி, படித்தவர்களும் தங்களிடையே பல கருத்துக் களை வைத்திருப்பார்கள். எண்ணங்களையும், கருத்துக் களையும், கவனித்துக் கையாளவேண்டும். ஏனெனில் எது சரி, எது தவறு என்பதை யாரும் உண்மையில் உணரார். ரொட்டியில் ஊசியை சொருகி நாயிடம் போட்டால் நாய் அவதிப்பட்டு சாகவும் நேரிடுவது போல எண்ணமும் சரியாக கையாளாதவரை, அவை மனிதனுக்கு விபத்தாக முடியும். நானே — சந்தேகப் பேர்வழியாதலால் மற்றவர்கள் சொல்வதைக் கேட் டெல்லாம் குழப்பமடைந்து பிறருடைய கருத்துக்களை

என்னுடையதாக வாங்கி எடுத்திருக்கிறேன். மனிதன் அவனுடைய எண்ணங்களினால் வாழவில்லை. ஆனால் அறிவற்ற ஆசையால் வாழ்கிறான்.

லாரிஸாவினுடைய நடத்தையே எனக்கு ஆச்சரிய மூட்டியது. அவளுடைய பெருமை எங்கே? ஒய்யார மெங்கே? ஆம், அப்பேர்ப்பட்டவள், பிச்சைக்காரன் தன் புண்களைக்காட்டி பிச்சை யாசிப்பதுபோல அவள் தன் அங்கத்தை நாடக மேடைகளில் காட்டுகிறாளே என்று நினைத்துநினைத்து அழுதிருக்கிறேன். கடைசியாக ஒருசமயம் இதை மகா தவறு என்று ஒத்துக் கொண்டாள்.

என் கழுத்தின் மீது கையைப்போட்டு "நான் தங்கள் வாழ்வை நாசமாக்கிவிட்டேனே! என்னருமைப் பீட்டரே, என்னை மன்னித்துவிடுங்கள். என்னைக் கட்டி முத்தமிடுங்கள்!" என்றாள்.

நான் முத்தமிட்டேன். அவளுடைய துன்பத்தைத் துடைக்க அவள் சொன்னதைச் செய்தேன். அழுதழுது முத்தமிட்டேன். அவள் உடல் சட்டு மாறாதிருந்தது. ஆனால் அவள் முகத்தில் சிறிது பொலிவு குறைவுதான். முன்போல் அவள் தன்னைப் படம் பிடித்துக்கொள்ள அனுமதிப்பதில்லை.

எனக்கோ நாற்பது வயதுக்கு மேலாகியது. லாரிஸாவோடு ஆரம்ப காலத்தில் முளைத்த காதல் நாடகத்தை நினைக்க வெட்கமாக இருக்கிறது. ஆண்ட

வனே! ஒரு மனிதனை எவ்வளவுதான் சகிப்பதற்காக நீ சிருஷ்டித்திருக்கிறாய். அவள் தூங்கும் சமயங்களில் நான் அவளருகில் உட்கார்ந்து, அவளையே பார்த்துப் பார்த்து அவள்மீது அப்படியே லயித்துப்போயிருக்கிறேன்.

ஜன்னலுக்கு வெளியே பனிக்கட்டிகள் விழும் சப்தம்கேட்டது. பனிமண்டலம் மறைந்து சந்திரன் தோன்றலானான். நான் என்னுடைய வேதனையையெல்லாம், பைத்தியம் பிடிக்காத நிலையிலிருந்து எப்படித்தான் சகித்துக்கொண்டேன் என்பதே ஆச்சரியமான விஷயம்.

அவள் வரவர தன் நடிப்பைப் பற்றித் தானே புகழ்ந்துகொண்டாள். நானும் அவள் திருப்தியுடனிருந்தால் போதுமென்று கருதி ஒத்து ஊதினேன்.

" என்னை அபாரமாகக் காதலிக்கிறீர்கள்' என்று என் கழுத்தை இறுகப்பிடித்து கட்டிக்கொண்டபின் " ஆமாம்-ஆமாம். நீ எதைப்பற்றியும் தொந்திரவு செய்துகொள்ளாதே " என்றேன். ஆனால் நாடகத் தொழிலை விட்டுவிட்டு என்னோடு வந்துவிடும்படி மன்றாடினேன். இப்பொழுதும் அவள் மறுத்து விட்டாள்.

அவளுக்கு அப்போது வயது நாற்பத்திநான்கு. அவளுக்கு ஹிருதய நோய் ஏற்பட்டுவிட்டது. அவள்

எந்த நிமிஷத்திலும் இறந்துவிடக்கூடுமென டாக்டர்கள் முடிவு சொன்னார்கள். கடைசியாக அவள் என்னோடு வெளிநாடுசெல்ல ஒத்துக்கொண்டாள். அவள் கடற்கரைப் பட்டினத்தையே விரும்பினாள்.

நாங்கள் சேன்செபஸ்டியனில் தங்கினோம். அங்கு ஒரு சிறிய வீட்டை அமர்த்திக்கொண்டோம். அந்த வீடு மிக அழகானது. கடல் அலையின் இரைச்சல் ரம்மியமாக இருந்தது. ஆனால் இராக் காலங்களில் எனக்கு என்னமோ மன அமைதி இருந்ததில்லை. கடந்த கால சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வந்தன. இதுமாதிரியான சந்தர்ப்பங்களில் காதலுக்குப் பாத்திரமானவள் உடன் இருக்கவேண்டியது அத்தியாவஸ்யமாகிறது. ஆகவே லாரிஸாவோடு வாழ்ந்தது வெறும் வாழ்க்கை என்று சொல்லமுடியாது.

அவள் மூச்சு விடுவது கஷ்டமாகக் காணப்பட்டது. அவளைக் கண்ணிமைபோல் காத்துவந்தேன். அவள் தான் இறந்துவிடுவோமென்பதை உணர்ந்திருந்தாள். ஆனால் அவள் அதை மறைத்துக்கொள்ள முயன்றாள்.

நான் அவள் அறையில் மணிக்கணக்காக உட்கார்ந்திருப்பேன், அவளும் அன்போடு "என்னருமைப் பீட்டரே! என் பக்கத்தில் உட்காருங்கள். குர்ஸ்க் நகரத்தில் எனக்கு எவ்வளவு அமோக வரவேற்பு இருந்தது ஞாபகமிருக்கிறதா?" என்பாள். அதற்கு அவளுக்கு இசைந்த பதில் சொல்வேன்.

கடைசியாக அவளால் பேசமுடியாதபோது நான் தலையை அவள் காலடியில் குனிந்து என் முகத்தை மூடிக்கொண்டு "என் அன்பே! என் காதலே! நீ சாகக்கூடாது" என்று பிரார்த்தனை செய்தேன்.

ஒருநாள் அவள் வேதனையோடு "அட கடவுளே! எவ்வளவு விரைவில் தங்களுக்கு நரை ஏற்படுகிறது" என்றாள். அவள் வேதனையை தணிப்பதற்காக நான் தலைக்குச் சிறிது சாயம் பூசிக்கொண்டேன்.

ஒருவன், தான் அருமையாகக் காதலித்த காதலியைப் பறிகொடுப்பதென்றால் அது மிகமிக சகிக்க முடியாத வேதனையாகும். இந்த சொல்லமுடியாத மனோவேதனையோடு இருநூற்றெட்டு நாட்களைக் கழித்தேன். இருநூற்றொன்பதாம் நாள் அவள் இறந்தாள். அவள் வீட்டின் மாடியில் வைக்கப்பட்டிருந்தாள். கடலே அன்று அமைதியாக இருந்தது. அன்று காலை தான் அவள் "இன்று நான் சௌகர்யமாக காணப் படுகிறேன்" என்றாள். அவள் அன்று மாடிக்கு வந்து நாற்காலியிலமர்ந்து கடலைக் கவனித்தாள். அவளுடைய நர்ஸ் அவளுக்குப் பிரீதியான மலர்மாலைகளை அன்று கொண்டுவந்து கொடுத்தாள். அவள் அந்த மலர்மாலை களைக் கண்டு மனமகிழ்ந்து என்னோடு விளையாட எத்தனித்தாள். நானும் அவளைக் கட்டிப்பிடித்தேன்.

கடைக்காரர் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்து நின்று வெறிக்க வெறிக்கச் சுற்றிமுற்றிப் பார்த்துப் பேசலானார்.

அவ்வளவுதான். அங்கு குன்றின் பக்கமிருந்த சிறிய மாதாகோவிலின் தோட்டத்தில் அவளைப் புதைத்தேன். அவளை, அவளுக்குச் சந்தோஷமில்லாத ரஷ்யாவுக்கு எடுத்துச்செல்ல எனக்கு விருப்பமில்லை. நானே, இங்கு ஒரு வருஷத்திற்கு முன்வரையிலும் வருவதில்லையென்றுதான் இருந்தேன்.

ஒரு நிமிஷநேரம் சும்மாயிருந்து, என்னைக் கவனித்து பின்னும் பேசலானர்

நான் லாரிஸாவைப்பற்றி ஏதோ புகார் சொல்லுகிறேனென்று நினைத்துவிடாதீர்கள். நீங்கள் விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினீர்களென்பதற்காகத்தான் எல்லாவற்றையும சொன்னேன். புகார் சொல்லுவது ஒரு பிரயோஜனமற்ற விஷயம்.

இப்படிப் பேசும்பொழுது அவர் முகம் கருத்துக் காணப்பட்டது. மாதா கோவிலின் மணியோசை கணீர் கணீர் என்று கேட்க ஆரம்பித்தது.

“கடைசியாக நான் ரஷ்யாவுக்கு வந்து இந்த இடத்தை அமர்த்திக்கொண்டேன். ஏனெனில் லாரிஸா வாழ்ந்த இடம் இந்த எதிர்வீடுதான். எங்களுடைய கதையே இங்குதான் ஆரம்பமாகிறது. நான் அவளுடைய போட்டோ படங்களையெல்லாம் அச்சிட்டு விற்பனை செய்துவருகிறேன். அதுவும் லாபத்திற்காக விற்பனை செய்யவில்லை” என்றார்.

அவர், உலர்ந்த மலர்களிருந்த பூஜாடியைக்காட்டி “அதிலுள்ள மலர்களைத்தான் அவள் கடைசி முறையாக

வைத்திருந்தாள். ஆனால் அவைகளும் மக்கிப்போய் விட்டன. அவைகளைக் காப்பாற்றிவைக்க அளவற்ற பிரயாசைப்பட்டேன். அனைத்தும் பயனற்றுப் போயின "என்றார்.

அவர் அறையின் மூலைக்குச்சென்று அங்கிருந்த குவியல்மேல் தன் மெல்லிய விரலால் மிருதுவாகத் தொட்டு "மலர்கள் சாம்பலாகிவிட்டன. அதனுடைய அழிவை நிறுத்த எந்த வழியுமில்லை"என்றார்.

முற்றும்.

[எங்கள் வெளியீடுகள்]

டி. என். ராமச்சந்திரன் எழுதியவை.

நமது சரித்திர பாரம்பர்யம்

உயர்ந்த பதிப்பு ரூ 2—8—0
மலிவுப் பதிப்பு ரூ 2—0—0

ஆசிரியர், ஒன்றுபட்ட சமுதாயம், தென்னாட்டு வரலாறு, இந்தியாவில் இஸ்லாம், இந்து – முஸ்லிம் கலாச்சாரம் ஆகியநான்கு அத்தியாயங்களில் நம் இந்திய சரித்திர பாரம்பர்யத்தை விருப்பு, வெறுப்பு அணுவளவுமின்றி மிக அழகாகவும் சுருக்கமாகவும் இந் நூலில் எழுதியிருக்கிறார். மிகுந்த ஆராய்ச்சியுடன் அழகாகவும் சுருக்கமாகவும் நல்ல தமிழில் எழுதப் பட்டுள்ள இந்நூலை நாமனைவரும் அவசியம் படிக்க வேண்டும்.

—சுதேசமித்திரன்.

மாஸ்கோ பாதை ரூ 1—8—0

" ஆசிரியர் ருஷியாவின் தற்கால நிலை, பொருளாதார நிலை விபரமாக எழுதியிருக்கிறார். ஆராய்ச்சியும் ஆதாரவுடனும் பேசுவதால் ருஷியக் கொள்கைகளில் மோகம் பிடித்தவர்களுக்கு இப்புத்தகம் கண் திறக்கும் ஓர் கருவி. நுட்பங்கள் நன்றாய் தெரிந்து எழுதப்பட்டிருக்கிறது. ருஷ்யாவின் உண்மை நிலையும் தெரியலாம். அங்குள்ள அரசியற்போக்கும் பொருளாதார மாறுதலும் நமது நாட்டுக்கு உகந்தனவா என்றுஞ் சிந்திக்கலாம்

—அகில இந்திய ரேடியோ திருச்சி.

சிந்தனுவாதிகளின் சத்தியசாதனை ரூ 0-12-0

மனிதன் எப்படித் தோன்றினன், அவன் தன் அறிவு வளர்ச்சியினுல் சாதித்தவைகள் என்ன என்பதை மேலைநாட்டு நூல்கள் சிலவற்றின் உதவியால் எழுதப் பட்டுள்ளதே இச்சிறு நூல். முயற்சி நல்லது. இத் தகைய நூல்கள் தமிழுக்கு வேண்டும்.

—கலைக்கதிர்.

புதிய வெளியீடுகள்

மனைவியைப்பற்றி . . . ரூ. 1-0-0

சிறுகதை மன்னன் மாப்பஸானின் கதையுடன் மூன்று பிரஞ்சு கதைகளையும் அதை தமிழாக்கிய க. கணபதியின் மூன்று கதைகளையும் சேர்த்து ஒரு சிறுகதைத் தொகுதியாக்கியுள்ளோம்.

ஒவ்வொரு கதையும் உள்ளத்தை அள்ளும் அற்புத சம்பவங்களுடன் கூடியது. கேவலம் ஆணின் உடல்வேட்கையைத் தணிக்க ஹோட்டலில் அமர்த்தப்பட்ட இளம் யுவதியின் கன்னித்தன்மை மறைபடுவதையும்—அதனால் அவள் பெண்மையுள்ளத்தில் குமுறி எழும் சோகநிலையையும்—இரவு நேரங்களில் வீட்டின்புறமாக யாரோ நடக்கும் காலடி ஓசையின் சப்தத்தைக்கேட்டு தன் மனைவியின் மேல் சந்தேகம் கொண்டு அப்பாவியான இளங்காதலர்களைப் பிரித்த தனது கணவனின்மேல் வெஞ்சினம்கூறும் மனைவியின் கதையையும் படிக்கப்படிக்க ஆச்சரியத்தையே தரும்.

★

சாந்திமொழி ரூ. 0-4-0

காந்திஜியின் மணிமொழிகளின் தொகுப்பு நல்ல தாளில் கையடக்கப் பதிப்பாக 64-பக்கங்களில் ஆர்ட் ஜாக்கெட்டுடன் கூடியது.

★

காதலி அச்சில் இருக்கிறது.

சிறுகதை ஆசிரியர் உலகில் ஆண்டன் செகாவ் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார். இந்நூல் டால்ஸ்டாயின் சிறப்புரையுடன் கூடியது. மனித சமுதாயம் புதுவிழிப்பினை மேற்கொள்ள சிறுகதைகள்மூலம் மகோன்னதசேவை செய்தவர் செகாவ் என்கிறார் புரட்சி எழுத்தாளர் மாக்ஸிம் கார்க்கி. அப்பேர்பட்ட செகாவ் எழுதிய 'காதலி' யை படிக்கும் போது கண்ணீர் கசிந்துருகாமல் இருக்கமுடியாதென்கிறார் டால்ஸ்டாய்.

இமயப் பதிப்பகம்

நாகப்பட்டினம்

டி. என். ராமச்சந்திரன்

எழுதிய

சிந்தனைவாதிகளின்
சத்திய சாதனை

விலை ரூ. 0—12—0

மனிதன் தோன்றிய வரலாறு—மனிதனுடைய நடவடிக்கைகளுக்கான காரண காரியங்கள், பொய், சூதுவாது, மோசநாசம், கொலை களவு, சண்டை முதலான நடத்தைகளுக்குக் காரணம்-மனிதனுடைய குணத்தையும் நடத்தையையும் மாற்ற வழிவகைகள் மரணம், சித்து, ஆத்மா ஆகிய விஷயங்களைப் பற்றிய உண்மைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளுக்கு ஆதாரபூர்வமாக டார்வின், ஹக்ஸ்லி, ஸ்பென்ஸர், கிளிப்போர்டு, சர் ஆர்தர் கெய்த் ஆகிய மேலைநாட்டு ஞானிகளின் நடவடிக்கைகளும், அவர்களின் சித்தாந்தங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன.

இமயப் பதிப்பகம்

நாகப்பட்டினம்

This is an account of our way of life from the earliest times, characterised by the spirit of union and co-operation, the principle of 'live and let live.' The features of the Indus valley civilisation are summarised. The author rightly observes that the empire of Vijayanagar was not destroyed by the battle of Talikota in 1565. Islam in India is the theme of the third chapter. The misconceptions of the Jizya are explained in detail. An attempt is made to vindicate Muslim rulers, including Muhammad bin-Tuglak and Aurangazib. The last chapter describes education in ancient India-Nalanda-and the Kalluris of the Tamil country; Muslim patronage of Indian literature and art; invocations in Hindu Gods in Muslim vice versa.

—THE HINDU

இந்த நூலை எழுதியதின் மூலம், காந்திஜியின் வழியில் நின்று, தன் நாட்டுக்கு ஆசிரியர் ஒரு மகத்தான சேவையை செய்திருக்கிறார். சரித்திரங்கள் திரித்துக் கூறப்படும் காலம் இது. பொய்க்கதை புனையும் இச்சமயத்தில் இந்நாலின் முக்யத்துவம் நன்கு உணரப்படவேண்டும். நல்ல முறையில் பதிப்பித்திருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகமாக வைக்க மிகமிக உகந்த நூல் "நமது சரித்திரபாரம்பர்யம்" என்று பலமாக சிபாரிசு செய்கிறோம்.

—முஸ்லிம்

இமயப் பதிப்பகம்
நாகப்பட்டினம்.